# கலைச்செல்வி

1—5



விலை சதம் 35

# புலவர் பரிசு 1958

## சிறந்த கவிதைக்கு ஒரு தங்கப்பதக்கம்

ஈழ நாட்டின் மதிப்பிற்குரிய புலவராகிய

**நவாலியூர் சோமசுந்தரப் புலவரவர்களின்**

நினைவாக இக்கவிதைப்போட்டி நடாத்தப்படுகின்றது.

வெற்றி பெறும் கவிஞருக்கு

**தங்கப்பதக்கம் ஒன்று வழங்கப்படும்**

பிரபல எழுத்தாளரும் ஆனந்தா அச்சக நிர்வாகியுமாகிய

*திரு. ச. வரதராசன் அவர்கள்*

இப்பரிசை வழங்குவார்கள்.

### நிபந்தனைகள்.

1 போட்டியில் எவரும் பங்கு பற்றலாம்,

2 கவிதைக்குரிய தலைப்பு "புதிய உலகு"

3 கவிதை 60 வரிகளுக்குக் குறையாது, 120 வரிகளுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.

4 கவிதைகள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30-11-58.

5 பரிசுக்குரிய கவிதையைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் கீழ்க்கண்ட ஐவரும் பணியாற்றுவார்கள்.

1 பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை
2 புலவர்மணி A. பெரியதம்பிப்பிள்ளை
3 பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா
4 திரு. கனக. செந்திநாதன்
5 ஆசிரியர் கலைச்செல்வி

6 "கலைச்செல்வி" நிர்வாகத்தில் பங்கு கொண்டவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்கு பற்ற முடியாது.

# 1959-ம் ஆண்டுக்கு

மிகச் சிறந்த

# கலண்டர்

# ஆனந்தா

## திருக்குறட்

# கலண்டர்

- யாழ்ப்பாணம் கொக்குவில் இரகுநாத ஐயரது பஞ்சாங்கக் குறிப்புக்களுடன்
- பெரிய அளவில் மிக அழகான பதிப்பு
- ஒரு சிறந்த கலண்டரில் நீங்கள் எதிர்பார்க்கும் அத்தனை விஷயங்களையும் அடக்கியது,

**எங்கும் கிடைக்கும்**

தயாரிப்பாளர்:

## ஆனந்தா அச்சகம்

226, காங்கேசன்துறை வீதி

**யாழ்ப்பாணம்**

# பாராட்டுக் கடிதங்கள்

I

22, தமிழ் சங்கம் வீதி,
மதுரை, 28-10-58.

அன்புடையீர்,

வணக்கம். தாங்கள் எழுதிய கட்டுரைகளோடு "கலைச் செல்வி" மலர்ந்திலங்கக் கண்டேன். மகிழ்ச்சி. "கலைச்செல்வி" நீடு வாழ்க. இலக்கியப் பணி புரிக.

நா. பார்த்த சாரதி.

(திரு. நா. பார்த்தசாரதி மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர். 'கல்கி'யில் 'பாண்டிமா தேவி' தொடர்கதையை எழுதுபவர்)

II

N. Sanjeev M. A.
Head of the Dept of Tamil
Pachchaieappas College, Kancheepuram
Member, Academic Council & Senate
University of Madras

KANCHEEPURAM
2-11-58

ஈழத்துக் "கலைச்செல்வி" கண்டேன்; இன்புற்றேன்.

அண்ணல் காந்தியடிகளின் திருவுருவைத் தாங்கி நிற்கும் அட்டைப் படம் - பல்வேறு கோணங்களிலிருந்தும் "கலைச்செல்வி"யை ஆராய்ந்து கூறும் 'வாசகர் வாய்மொழி' - ஆண்மையூட்டும் 'பயப்படாதீர்கள்' - தலையங்கம் — நடுநிலையான மதிப்புரைகள் - அருள் செல்வநாயகம் கிராமியக் கவிதைகளைத் துணையாகக் கொண்டு புனைந்துள்ள அரிய இலக்கியக் கட்டுரை - சிறந்த சிறுகதைகள் - இனிய கவிதைகள் - சுவை நிறைந்த தொடர் கதை - இவையாவும் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

"கலைச்செல்வி" வளரும் எழுத்தாளர்கட்கு ஊக்கந்தருவது மிக்க மகிழ்ச்சிக்கு உரியது. 'பெரியோர் கேண்மை' தனிச் சிறப்புடையது.

சுருங்கச் சொல்லுமிடத்து 'கலைச்செல்வி' ஈழத்து இதயத்தையும் இன்பத் தமிழையும் தமிழகத்து மக்கள் எளிதில் உணர்ந்து அரிய பயன் பெற சிறந்த துணை.

"கலைச்செல்வி" யின் அருளால் ஈழமும் தமிழகமும் எல்லா வகையாலும் மாட்சி பெறுக!

அன்புள்ள
ந. சஞ்சீவி

கலைச்

"தேமதுரத் தமிழோ
பரவும்வகை செய்

| | |
|---|---|
| கலை 1 | கார்த்தி |


| | | |
|---|---|---|
| மாமணி மறைந்தது | | |
| ஈழத் தமிழகத்தின் இரண்ட | | |
| கணிதமேதை சகுந்தலாவுட | | |
| பாலர் பகுதி | | |
| நெஞ்சக் குளத்திலே | | |
| வீசாதீர்! | மஹாகவி | 21 |
| மணற் கோவில் | சு. வே. | 22 |
| குயிலின் குரல் | திமிலைத்துமிலன் | 29 |
| எழுத்துலகில் நான் | சோ. சிவபாதசுந்தரம் | 31 |
| சுவாமிவிபுலாநந்த அடிகளும்மணிமண்டபமும் | ம.நாகலிங்கம் | 35 |
| உங்களுக்கு மட்டும் | அம்பி | 44 |
| இதய வானிலே | உதயணன் | 50 |
| கண்டதும் கேட்டதும் | | 62 |
| இருமனம் | இ. நா. | 63 |


விலை சதம் 35

அட்டைப்படம்: தமது 81வது வயதில் காலமான, தமிழ்த் தாயின் தவப்புதல்வர் வித்துவசிரோமணி கணேசையர் அவர்கள். அறிஞரின் 'புளக்'கை உதவிய "ஈழகேசரி" நிலையத்தினர்க்கு நமது நன்றி.

(ஆ—ர்)

கடிதம் எழுதுபவர்கள் தங்கள் சரியான முக வரியையும் குறிப்பிட வேண்டும்.

**வரவேற்பு!**

'உதிர்ந்த ரோஜா' பற்றிய தங்கள் விமர்சனத்தை வரவேற்கின்றேன். குறைகளை விளக்கினால்தான் அடுத்த சிருஷ்டி புதுமையானதாக மலரும்.

சேலம். H R. சென்ன கிருட்ணன்

**சேட்டையா? சேவையா?**

'அவர்க்கும் உண்டு இதயம்' அருமையான கதை. மாணவர்கள் சேஷ்டை செய்தாலும் சேவையுணர்ச்சி உள்ளவர்கள் என்பதை எடுத்துக்காட்டும் 'எம்ரீயெஸ்'சுக்கு எமது பாராட்டுக்கள்.

திருநெல்வேலி. சு. பாலசுப்பிரமணியம்
க. பரராஜசிங்கம்

காஞ்சீபுரம். சோ. பரமசாமி

**அதிசயம், ஆனால் உண்மை!**

'உறுதி பிறந்தது' என்ற கதை அற்புதமான கதை. ஒரு மாணவி எழுதினாள் என்பதை நம்பமுடியவில்லை ...!

நவாலி. க. சொர்ணலிங்கம்

**பாரதி கட்டிய பாதை!**

'பாரதி காட்டிய பாதையில்' பாரதியை முழுமையாகக் கண்டேன். 'முருகைய'னின் கவிதை நன்றாக இருக்கின்றது.

சுன்னாகம் சி. ஜெகநாதன்

**புனைப் பேயர்!**

ஆற்றல் போட்டி எண் 4-ன் 5-ம் கேள்வி மாணவர்க்குப் பொருந்தாது. புனைபெயரில் உள்ளவரின் பெயரை அப்படிக் கண்டுபிடிப்பது?

கொக்குவில். மு. சி. சிறீகாந்தன்.

**சிறு கறை!**

'உறவை' உருவாக்கியவர் உணர்ச்சி வசப்பட்டால் 'புத்தர் கோயிலை'ப் புகுத்தத்தான் வேண்டுமா?

மண்டூர். குண்டுமணி.


**தீபாவலி வாழ்த்து**

'கலைச்செல்வி' வாசகர்கட்கும், சந்தா நேயர்கட்கும், எழுத்தாளர்கட்கும் விளம்பரதாரர்கட்கும், விற்பனையாளர்க்கும் மங்களகரமான தீபாவலி வாழ்த்துக்கள் உரித்தாகுக.

ஆ—ர்

# மாமணி மறைந்தது!

ஈழத்தின் இலக்கிய விளக்கு அணைந்து விட்டது. ஒல்காப் புகழ் படைத்த தொல்காப்பியத்திற்கு ஒப்பற்ற முறையிலே உரையெழுதிய கைகள் ஓய்ந்துவிட்டன. அருமையான தெளிவுரைகளை அகநானூற்றிற்குத் தந்த அறிஞர் அமரராகி விட்டார். மகாவித்துவான் கணேசையர் அவர்கள் மரண மடைந்துவிட்டார்!

தமிழே உயிராக, தமிழே உடலாக, தமிழே உடையாக, தமிழுடன் ஒன்றித்து வாழ்ந்தவர் கணேசையர் அவர்கள். அன்பின் உறைவிடமாய் அறிவின் பிறப்பிடமாயிருந்து அநேக மாணவர்கட்கு அறிவொளியூட்டி அவர்களைத் தமிழ்ப்பணி செய்யவிட்டார். தன் சிந்தனைக்கடலுள் எடுத்த சீரிய முத்துக்களைச் சிறந்த கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் கோத்துத் தமிழ்த் தாய்க்கு அணிசெய்தார்.

இப்பேரறிஞரின் பிரிவால் தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் இன்று தவிக்கின்றது.

இந்நாட்டிற் பிறந்து எங்காளும் 'தமிழ் செய்து' எண்டிசையும் புகழ் பரப்பிய இத்தமிழறிஞர்க்கு நாம் என்ன செய்யப் போகின்றோம்? தமிழ் இருக்கும் வரை, அறிஞரின் நினைவும் அழியாதிருக்கும். உண்மை. என்றாலும் எமது நன்றியைத் தெரிவிக்க வேண்டாமா?

அறிஞரின் நினைவிற்காகக் கலைக்கூடங்கள் ஏற்படுத்தப் படவேண்டும். "கணேசையர் நிதி" ஏற்படுத்தித் தமிழாராய்ச்சி செய்யவிரும்புவோர்க்கு உதவியளித்து ஊக்குவித்தல் வேண்டும். உயிருள்ளளவும் தமிழிற்காக உழைக்க முன்வருபவர்கட்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும்.

அறிஞர்களைப் போற்றும் நாட்டிலேதான் மேன்மேலும் அறிஞர்கள் தோன்றுவார்கள்.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். சென்ற இதழில் வெளியான 'உறவு' என்ற கதையில் இடம் பெற்ற சொற்பிரயோகம் ஒன்று வாசகர்கள் சிலரின் மனத்தைப் புண்படுத்தி விட்டது. இதற்காக நாம் வருந்துவதுடன், இப்படியான தவறுகள் இனிமேல் நேரிடா என்பதற்கும் உறுதி கூறுகின்றோம். இத்தவறை அன்புடனும் உரிமையுடனும் சுட்டிக் காட்டியோர்க்கு எம் நன்றி.

அன்பர்கள் பலரிடமிருந்து கதைகள், கவிதைகள் தினமும் வந்த வண்ணமேயிருக்கின்றன. இத்தனை அருமையான விஷயங்களையும் வெளியிட்டு எல்லோரையும் ஊக்கப்படுத்த முடியவில்லை என்று தான் நாம் வருந்துகின்றோம். 56 பக்கங்களில் எத்தனை கதைகளைத்தான் வெளியிடுவது? நிதிநிலைமை சீர்திருந்தினல் பக்கங்களை அதிகரித்துப் பலருக்கும் சந்தர்ப்பமளிக்கலாமல்லவா ?

இதுவரை 'வளர்ச்சி நிதி'க்குப் பணம் அனுப்பாதவர்கள் விரைவில் தங்கள் பணத்தை அனுப்புவார்களென எதிர்பார்க்கிறோம், ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பற்றுச்சீட்டுகள் அனுப்பப்படும்; பெயர்கள் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும்.

பல அன்பர்களின் வேண்டுகோளின் படி கவிதைப் போட்டியின் முடிவு திகதியை 30-11-58 ஆக மாற்றியுள்ளோம். மாணவர்க்கான நாவலர் கட்டுரைப் போட்டியின் முடிவு திகதியும் அதுவேதான். போட்டிகளில் பங்குகொள்ள விரும்புபவர்கள் தங்கள் விஷயங்களை விரைவில் அனுப்ப வேண்டும்.

இடநெருக்கடியால், சென்ற இதழில் பாரதி மலர் விமர்சனப் போட்டி முடிவை வெளியிடவில்லை. சிறந்த விமர்சனத்தை எழுதியவர் யாழ்-மத்திய கல்லூரி மாணவர் எம். எச். ஹமீம். அவருக்கு எமது பாராட்டுக்கள்.

'பாலர் பகுதி' இந்த இதழில்இடம் பெறுகின்றது. சிறந்த விஞ்ஞானக் கட்டுரைகள் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிபிடப்படும்,

சந்தா நேயர்களைச் சேர்த்து உதவிய காரைநகர் சரவணபவன், கொழும்பு அம்பிகைபாகன், கல்வியங்காடு நடராசா, வவனியா முத்தையா, புளியங்குளம் வைத்தீஸ்வான் ஆகியோருக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

—ஆசிரியர்,

*பண்டிதர் வ. நடராசா அவர்கள், சுன்னாகம் ஸ்கந்தவரோதைய கல்லூரியில் தமிழ்ப்பணி புரிபவர். ஈழத்து தமிழகத்தின் அகல் விளக்காக ஒளிர்ந்த வித்துவான் கணேசையரவர்களிடம் இருபது ஆண்டுகளாகப் பக்தி சிரத்தையாகத் தமிழ்வளம் பெற்ற தகைமையர். இவர், வித்துவான் கணேசையரவைப் பற்றித் தருகின்றார்.*

# ஈழத் தமிழகத்தின்
## இரண்டாவதுகண்

— வ. நடராஜா —

இறைவன் முக்கண்ணன். ஈழத்துத் தெய்வத்தமிழும் மூன்று கண்களைப் பெற்றிருந்தது. காலையிற்றோன்றும் கதிரனையது ஒன்று; மாலையில் தோன்றும் மதியனையது மற்றொன்று; பழிப்பின் ஒன்று விழித்து எரியும். அது மூன்றாவது கண்; அக்கினிக்கண்.

மதியனைய குளிர் நிலவு போன்ற சொற்களால் தேன் மொழிச் செய்யுள்கள் பல புனைந்து ஈழநாட்டைத் தமிழ் நாட்டுக்கு ஒப்பாக—ஓரளவு அதனிலும் மிக்கதாக—கடந்த சில ஆண்டுகள் ஒளியுறச் செய்த கவிஞர் கோமான் சோமசுந்தரம்—தமிழகத்தின்சோமன் (சந்திரன்) அனைய கண் சில ஆண்டுகளின் முன் அவிந்தது; அன்று தமிழகம் உண்மைக் கவிஞனை இழந்தது; தமிழ்நாடு இனி அத்தகைய ஒரு கவிஞனைப் பெறுங்காலமும் வருங்கொலோ?

இன்று; (9–11–58) ஈழத் தமிழ்த் தாயின் வலக்கண்—கதிர்க்கண்—இலக்கணக்கண் அவிந்தது. கடந்த எண்பத்தொரு ஆண்டுகளாகத் தமிழ்த் தாயின் மடிமிசைக்கிடந்து, அவள்தன் திருமுலைப்பாலுண்டு, அவளது அழகிலக்கணங்களையெல்லாம் நுண்மாண் நுழைபுலமுடையார் மூலமாகவும் தம் மதிவண்மையானும் அறிந்து அறிவொளிபரப்பி வந்த மகாவித்துவான் பிரம்ம ஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து ஆன்ம சாந்தி பெற்றார்.

ஈழத்தின் தன்னேரில்லாத் தமிழறிஞரும், நுண்மாண் நுழைபுலம் வல்லாரும் ஆறுமுக நாவலரின் மருகருமாகிய வித்துவசிரோன்மணி பொன்னையா உபாத்தியாயர் அவர்களே, மகாவித்துவான் கணேசையர் அவர்களின் தமிழ்த் தந்தையாவர். ஆசிரியரிடத்து மாணவர்கள் எத்தகைய மதிப்பு-பயபக்தி—உடையவர்களாய் இருத்தல் வேண்டும்என்பதற்கு மகாவித்துவான் கணேசையர் அவர்களே தக்கசான்று என்பதை அவரிடம் கல்விபயிலச் சந்தர்ப்பம் கிடைத்தவர்கள் நன்கு அறிதல் கூடும், பொன்னையா உபாத்தியாயர் அவர்களைப்பற்றி, அவர்மிகவும் பயபக்தியுடனும் நன் மதிப்புடனும் அவரது அறிவாற்றல்களைப் புகழ்ந்து கூறுவார். தம்மிடம் கல்வி பயிலுவோரும் தம்மைப்போல் இருத்தலை. அவர் பெரிதும் விரும்பினார்.

தமிழ்த் தாத்தா சாமிநாதையர்

அவர்களுக்கும் கணேசையா அவர் களுக்கும் ஒருமைப் பாடுகள் பல இருப்பினும், வேறுபாடுகளும் சில இருக்கின்றன.

டாக்டர் சாமிநாத ஐயர் அவர்கள் எதிர்காலத்தை மனதிற் கொண்டோ வெறெதற்கோ. தம்வாழ்வில் நடந்த ஒவ்வொரு சம்பவங்களையும்-வரலாறு களையும்-மிக ஒழுங்காகக் குறித்து வைத்துள்ளார்கள் என்பதை, சாமி நாதஐயரவர்களது, "என்சரித்திரம்" காட்டுகிறது. அந்த இயல்பு கணே சையா அவர்களிடம் இல்லை. முக்கிய மான சம்பவங்களைக்கூட அவர்கள் மறந்து விட்டார்கள் என்றே கூற லாம். நூல்களைக் கற்றலிலே அவ தானம் செலுத்தினரேயன்றி வாழ்வு வரலாறுகளில் அவர் அவ்வளவு அவ தானம் செலுத்தமுயற்சிஎடுக்கவில்லைப் போலும்! அவர் வாழ்வின் பிற்பகுதி யில் "கற்றனவும் இனியமையும்' என்ற மனப்பான்மையைப் பரிபூரணமாகக் கொண்டிருந்தார் என்பது உண்மை.

மகாவித்துவான் பிரம்மஸ்ரீ கணே சையர் அவர்களோடு ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக ஓரளவு பழக் கம் எனக்கு உண்டு. இருபது ஆண்டு களுக்கு முன்னர் அவர் வாழ்ந்த வாழ் வுடன் இன்றைய வாழ்வையும், ஏறத் தாழ நாற்பது வருடங்களின் முன் அவர் இலக்கண சம்பந்தமாக எழுதிய கண்டனக் கட்டுரைக்கால வாழ்வை யும் ஒப்பிட்டுப்பார்ப்பின் அவர்வாழ்வு எவ்வாறு வரவர மாற்றம் அடைந்துள் ளது என்பதை ஊகித்தல் முடியும்.

கல்விச்செருக்கு யாரையும் விடாது; "குற்றம் குற்றமே" எனக்கூறிய நக் கீரர் கல்வியைப் புகழ்கிறோம். அத் தகைய இயல்பு கணேசையாவிடம் வாலிபப்பராயத்தில் இருந்தது என் பதை அவரது கண்டன உரைகள் காட்டுகின்றன. வயது அதிகரிக்க அதிகரிக்க, அவரது வாழ்விலும் மாற் றம் ஏற்பட்டது. அவர்களது அறுப தாவது வயதளவில் கல்வியை அவர் முதன்மையாகக் கருதவில்லை. கல்வி யையும் ஆன்ம ஈடேற்றத்தையும் ஒப்பமதித்தார். "கற்றதனலாய பய னென்..." என்ற குறளுக்கு ஏற்ற வாழ்வாக அவர் வாழ்வு மலர்ந்தது. "கல்வியென்னும் பல்கடற் பிழைத் தும்" என்னும் அடியின் பொருளை அவர்மனம் நன்குமதித்தது போலும்! ஐயா அவர்களது வாழ்வின் பிற்பகுதி யில் அவர் கல்வியை மறந்துவிட்டார், என்று கூறினும் அமையும் கணே சையா அவர்கள் நினைத்திருந்தால் அவர்களுக்குக் கிடைத்த நூல்கள் மூலம் அவர் சிறந்த ஒரு நூல்நிலை யமே அமைத்திருக்கலாம். 'ஆயின் நூல்களை அவர் போற்றிப் பாதுகாக்க வில்லை.

கணேசையா அவர்களை நினைக்கும் போது வறுத்தலைவிளான் மருதடி விநா யகர் ஆலயத்தையும் மருதடியையும் மறத்தல் முடியாது. கணேசையர் என்ற நாமமும் அவருக்குப் பொருத்த மாக அமைந்ததுபோலும்! மருதடி விநாயகர் பாதமே அவரது பரமபதம் அதனயலிலேயே அவரது ஆச்சிரமம் இருக்கிறது.

கணேசையா அவர்களது ஆவி பிரிந்த விதம் அவரது ஆன்மசக்தியைக் காட்டுகிறது. எவரது உதவியையும் விரும்பாமல்—தன் ஆன்ம சக்தியின் ஆற்றலினல் தன்னந்தனியாகவே வாழவிரும்பினுர். அவர் வாழ்ந்தார்.

கணேசையா அவர்களை தமிழ்நாடு என்றும் மறத்தல் முடியாது. பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் உள்ளவரை கணேசையர் நாமமும் நிலைத்திருக்கும். தொல்காப்பியம் பழமையான இலக்கணம் அதன் உரைமிக நுண்மையும் ஆழமும் பொருந்தியது. அதனை விளங்கிக்கொள்ளுதல் மிகவும் கஷ்டம். அந்நூலைப் பிரதி செய்தவர்களாலும் அதன்உரைக்கஷ்டத்தாலும் அதனை விளங்குவார் மிக அரியராயினர். வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை (பொன்னையா உபாத்தியார்) அவர்களிடம் கற்றமையாலும் தமது விவேகத்தாலும் அநுபவத்தாலும் தொல்காப்பிய உரைக்கு ஐயா அவர்கள் செய்தவிளக்கம் புலவர் முடிமணியாய் என்றும் திகழும் இது மட்டுமா? ஈழமண்டலத் தமிழ்ப் புலவர் சரிதை, இரகுவம்ச உரைஎன்பன ஒவ்வொன்றும் கணேசையா அவர்களது அரும்பெறற் புதல்வர்கள் ஆவர்.

யாழ்ப்பாணம் தமிழ்ப்பரம்பரையை ஒவ்வொன்ருக இழந்து வருகிறது இன்னும் இரண்டொரு தமிழ் அறிஞர் இலைமறைகாயாக இருக்கிருர்கள் தென்கோவை கந்தையாபிள்ளை அவர்கள் தமது தள்ளாப்பிராயத்தில் நோயுடன் போராடுகின்ருர். ஆனல் அவர் என்ன சொல்லுகிருர்; "நாம் ஒரு நாளிலா இறக்கிருேம்? தினமும் இறந்து கொண்டு வருகிருேம். நான் இறந்து கொண்டேயிருக்கிறேன்". என்று கூறுகிருர். தென்கோவை கந்தையாபிள்ளை அவர்களுக்கும்கணேசையா அவர்களுக்கும் இருந்த மன ஒருமைப்பாடு மிக அதிகம், சமயத் துறையில் இவ்விருவரும் ஒருமைப்பாடான அபிப்பிராயம் உடையவர்களாய் இருந்தார்களென எண்ணுகறேன்,

"மாதேவற்கு ஏகாந்தர் அல்லராகில் மங்குவார் அவர் செல்வம்மதிப்பேமல்லேம்" என்ற பாடலில், "ஏகாந்தர்" என்ற சொல்லின் பொருளை கணேசையா அவர்களது இறுதிக் காலத்துக் காணமுடிந்தது. தனிமையை—இறைவனைத்தாம்மாத்திரம் தனித்திருந்து தரிசிக்கும் மனப்பான்மையை மிகவும் விரும்பினுர். அதனல் பிறர் உதவியை நாடாது தாமே தம் ஆத்ம சக்தியால் அன்பவாழ்வு வாழ்ந்தார், அன்பமரணம் எய்தினுர், ஆன்ம சாந்தி பெற்றுர்,

**சாந்தி! சாந்தி!!**

பேட்டி :

## உலகம் சுற்றும் கணிதமேதை

செல்வி

# சகுந்தலாதேவி



மின்சாரத்தால் இயக்கப் படும்கணிதயந்திரத்திற்கே சவால் விடும் இந்தியப் பெண் செல்வி சகுந்தலா! அவர் நடமாடும் கணி தயந்திரம்! உலக ஏடுகள் அனைத்தும் இப்படி ஏகோபித்துப் பாராட்டுகின்றன. மேல் நாடுகளில் டெலிவிசன், றேடியோ, மற்றும் பிரமாண்டமான சபைகளிலெல்லாம் தோன்றி, மின்னல் வேகத்தில் விடை சொல்லுகிறார். உலகத்துக்கணித விற்பன்னர்கள் இவர் திறமை கண்டு பிரமித்துப் போயிருக்கிறார்கள்!

இருபத்தெட்டு வயதான சகுந்தலா பங்களூரைச் சேர்ந்தவர். தமிழ் ஆங்கிலம் தவிர ஸ்பாணிய மொழியிலும் சரளமாகப் பேசுவாராம். நியூயோர்க், லண்டன், பாரிஸ், டோக்கியோ, சிங்கப்பூர் உட்பட உலகத்தின் பெரிய நகரங்களிலெல்லாம் தம்திறமையை நிரூபித்து விட்டு, அவுஸ்திரேலியா செல்லும் வழியில், இலங்கைக்கு முதல் தடவையாக வந்துள்ளார்.

தினமும் மேடைகளிற் தோன்யவேண்டிய நெருக்கடி, பேட்டிக்காக குவியும் பத்திரிகை நிருபர்கள், அடிக்கடி அழைக்கும் டெலிபோன், இவற்றிற்கிடையிலும்

*நம் 'கலைச்செல்வி' பற்றி ஆர்வமுடன் விசாரித்து, அரை மணித்தியாலத்திற்கு மேல், அன்புடன் பேட்டி அளித்தார். அன்னாருக்கு நம் இதய பூர்வமான நன்றி!*

கொழும்பு கிருண்ட் ஒறியண்டல் ஹோட்டலில் செல்வி சகுந்தலா தங்கியிருந்தபோது. சென்ற 4-11-58 அன்று, கலைச் செல்வி'க்காக அளித்த பிரத்தியேக பேட்டி இது.

ஆ-ர்.

## பேட்டிகண்டவர்கள்

## "ஈழத்துச் சோமு" & உதயணன்

**கேள்வி:** உலகம் சுற்றி உங்கள் திறமையை நிரூபித்து வருகிறீர்கள் என்பதறிந்து தமிழர்களாகிய நாம் மிகவும் பெருமைப் படுகிறோம். இந்தக் கணித விடைகள் உங்கள் உள்ளத்தில் உள்ளொளி (VISION) போலத் தெரிகிறதா? அல்லது ஏதாவது வாய்ப்பாடு (FORMULA) முறைகளைக் கையாளுகிறீர்களா?

*பதில்:* இயற்கைதந்த ஒருகொடை என்றுதான் சொல்லவேண்டும். வேறெதுவும் சொல்லமுடியவில்லை. எனது ஐந்தாவது வயதிலிருந்து என்னிடம் இந்த சக்தி இருந்து வருகிறது!

**கேள்வி:** மிகவும் நல்லது. இந்த மேதைத்தன்மை உங்களைத்தவிர வேறு இன்னும் யாரிடமாவது முன்பும் இருந்திருக்கிறதா? அல்லது இப்போது இருக்கிறதா?

**பதில்:** உலகம் பரந்தது. அதனால் வேறும் இப்படித்திறமையுள்ளவர் இருக்கத்தான் வேண்டும். ஆனால் எனது கேள்விக்கு எட்டியவரை யாருமில்லை.

**கேள்வி;** கணிதத்தில் சிலவற்றை அளப்பதற்கு சிலகருவிகள், உபகரணங்கள் தேவை. இவை முற்காலத்தில் இந்தியாவில் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியாயின் மிக உயரமான மதுரை மீனாட்சி அம்மன் கோவிலை பல

ஆயிரம் வருடங்களுக்கு முன்பே எப்படிக் கட்டி முடித்திருப்பார்கள்? பஞ்சாங்கம் முதலியவற்றை எப்படி வழு இன்றிக் கணித்திருப்பார்கள்? உங்களிடம் இருப்பது போல ஏதாவது உள்ளொளி (VISION) மூலமாக இவற்றை அளந்திருப்பார்களா?

*பதில்:* மன்னிக்கவும். என்னுல் இதுபற்றிச் சொல்லமுடியவில்லை.

**கேள்வி:** உலகத்துக்குக் கணித எண்களை அராபியநாடுதான் தந்ததாக ஐதீகமிருந்தது. ஆனுல் அதற்குமுன்பே சூனியம் என்ற O (சைபர்) இந்தியா தேசத்தில் வழக்கத்திலிருந்திருக்கிறது. Oல் இருந்துதான் மற்றைய எண்கள் தோன்றியதாகக் கருதப்படுவதால், இந்தியாதேசம்தான் இதில் முன்னேறியிருப்பதாகக் கொள்ளவேண்டும். உங்கள் கருத்து என்ன?

*பதில்:* இந்தியா தேசம்தான் *சரி*, என நம்புகிறேன்.

**கேள்வி:** கௌரி சங்காடி, இராமனுஜன், அஷுட்டோஷ்முகர்ஜி மூவரும் இந்தியாவிலுள்ள பிரபல கணிதமேதைகள் என வெளிநாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன. இவர்களது மேதைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* அவர்கள் சிறந்த கணிதமேதைகள் என நீங்கள் சொல்லுவதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

**கேள்வி:** உலகமேதையான ஐன்ஸ்டீன் வாழ்ந்தபோது, அவரை நீங்கள் சந்தித்திருப்பீர்கள் என எண்ணுகிறும். அவருடன் கணிதத்துறையில் ஏதாவது சம்வாதம் செய்தீர்களா?

*பதில்;* ஐன்ஸ்டீனைச் சந்தித்தேன். ஆனுல் அவர் அப்போது மரணப்படுக்கையிலிருந்தபடியால் எதுவும் பேசமுடியவில்லை.

**கேள்வி:** உலக நாடுகள் பலவற்றிற்கெல்லாம் விஜயம் செய்யும் நீங்கள் அவசியம் பல மேதைகளைச் சந்தித்திருப்பீர்கள். அவர்களெல்லாம் உங்களிடமுள்ள மேதைத்தன்மைபற்றி என்ன கூறினுர்கள்?

*பதில்:* அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். ரொம்பவும் பாராட்டினுர்கள். பல இடங்களில் பரீட்சித்தும் பார்த்திருக்கிறுர்கள். உதாரணமாக றங்கூனிலுள்ள புரொபசர் ஆங்ஷ்லா என்பவர் மிகவும் கடுமையான கணக்கொன்றைத் தந்தார். அதை நான் சரியாக, சடுதியாகச் செய்துவிட்டேன்.

அவர் மிகவும் மகிழ்ந்து பாராட்டினூர். (இந்த கடும் கணக்கும், செய்தியும், புகைப்படமும் 12-4-58 "நியூடைம்ஸ் ஒவ் பர்மா." பத்திரிகையில் வெளியாகி இருப்பதை மிஸ்.சகுந்தலா நமக்குக் காண்பித்தார்—பேட்டி கண்டவர்கள்)

**கேள்வி:** சரி; ஒரு ஜெர்மன் பத்திரிகை (HAMBURGER FREE PRESS) வர்ணித்தது போல நீங்கள் உங்கள் தலையிலேயே ஒரு கணிதயந்திரம் அமைந்த பெண்மணி என்பதில் சந்தேகமேயில்லை. தமிழ்ப்பெண் என்ற முறையில் தமிழ்பற்றியும் சில கேள்விகள் கேட்கவிரும்புகிறோம்.

*பதில்:* ஓ! தாராளமாக கேட்கலாமே!

**கேள்வி:** உங்கள் சுற்றுப்பயணத்தின் போது பல நாடுகளிலும் தமிழர்களைச் சந்தித்திருப்பீர்கள். வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* பல வெளி நாடுகளில் ஏராளமாகத் தமிழர்களைச் சந்தித்திருக்கிறேன். அன்பும் மகிழ்வும் நிறைய என்னுடன் பேசியிருக்கிறார்கள். சில நாடுகளில் தமிழ்ப் பெண்கள் எனக்குப் பல தங்க வளையல்களைப் பரிசளித்திருக்கிறார்கள். எங்கு வாழ்ந்தாலும் தமிழ்க்கலாசாரம், பண்பாடு இவற்றை மறவாது இருக்கிறார்கள். தமிழ் என்ற உணர்ச்சி உலக நாடுகள் எல்லாவற்றிலும் சிதறுண்டு கிடக்கும் தமிழர்களிடமும் இருக்கிறது.

**கேள்வி:** இலங்கைத் தமிழர் நிலைபற்றிக்கேள்விப்பட்டிருப்பீர்களென நம்புகிறோம். இதுபற்றி ஏதும் சொல்லுவீர்களா?

*பதில்:* மன்னிக்கவும். நான் எதுவுங் கூற விரும்பவில்லை. ஆனாலும், இலங்கைக்கு வந்திருப்பது இதுதான் முதல்தடவை. யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கும் சென்று நன்றாக அவர்களுடன் நான் கலந்து பழகவேண்டும். அதற்குப்பிறகுதான் இலங்கைத் தமிழர்களைப்பற்றி என்னால் சொல்ல முடியும்.

**கேள்வி:** தமிழ்ப்பெண்களிற் பெரும்பாலோர் இன்னும் முன்னேற்றமடையாமலிருக்கிறார்கள். புரட்சிக்கவிஞர் பாரதிகண்ட புதுமைப் பெண்களாக அவர்கள் மாறுவதற்கு நீங்கள் என்ன ஆலோசனை கூறுவீர்கள்?

*பதில்:* பெண்களுக்குக் கல்வி மிக அவசியம். அது இருந்தால் மற்றைய உரிமைகளைத் தாமாகவே உண்டாக்கிக் கொண்டுமுன்னேறிவிடலாம்.

**கேள்வி;** தமிழிலும் உங்களுக்கு ஆர்வமிருப்பது கண்டு மகிழ்கிறோம். இலங்கை வானொலியிற் பேட்டி அளித்தபோது சிறு கதைகள் கூட எழுதியிருப்பதாய்த்தெரிவித்தீர்கள். அண்மையில் ஏதாவது சிறுகதை எழுதவில்லையா?

பதில்: கல்லூரி நாட்களிற்றான் எழுதியிருக்கிறேன். இப்போது தமிழில் தினமும் பேசுவதற்கே முடியாமலிருக்கிறது - உலக சுற்றுப்பிரயாணத்தால். தமிழில் இப்போது சிறுகதை கட்டுரை எழுதுவதில்லை. எனது சுயசரிதத்தை ஆங்கிலத்தில் தான் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

**கேள்வி;** உங்கள் பொழுது போக்கு என்ன?

பதில்: புல்லாங்குழல் வாசிப்பது. கச்சேரிகூடச் செய்வேன். சிறுவயதில் பரதநாட்டியமும் என் பொழுது போக்காக இருந்தது. இப்போது இல்லை.

பே. க: இத்தனை பொறுமையுடன் 'கலைச்செல்வி'க்காகப் பேட்டி தந்தமைக்கு நன்றி. வணக்கம்.

செல்வி. சகுந்தலா: வணக்கம்.


# 'நாடோடி'

**இளந்தமிழ் மாத இதழ்**

கதைகள், கட்டுரைகள், கவிதைகள்
சிறுவர் புத்தி விருத்திப் போட்டி அச்சுக்
கூப்பன்கள், கதைப்போட்டி,
இன்னும் பல,

**தனிப் பிரதி 10 சதம்**
**வருடச் சந்தா 1-50**

**நாடோடி, அக்குரல்ல, ஒப்பநாயக்கா.**

# சின்னப் பாப்பா

வ. குகசர்மா

சின்னப் பாப்பா சிரித்த வண்ணம்
திரும்பிப் பார்க்கிருய்
வண்ணச் சட்டை தந்ததாரோ
வகுத்துக் கூறுவாய்
எண்ணம் வளரும் காலைப் போதில்
கண்கள் மலருவாய்
வன்ன மொட்டே உந்தன் முகம்
மகிழச் செய்ததார் ?

வாசலிலே வந்து நீதான்
மகிழ்ந்து சிரிக்கவே
ஆசையுடன் வளேள் மின்ன
அம்மா அழைக்கவே
நேசமுடன் கண்கள் நோக்க
நீயும் ஓடியே
பாசமுடன் அவளைக் கேட்கும்
பண்டம் என்னவோ ?

0 0 0

சோலை வரு தென்றற் காற்றில்
கெண்டை ஒலி கேட்குது
மாலை தனில் செக்கர் வானம்
மதிமுகத்தைக் காட்டுது.
சேலை தங்கு மடியில் தூங்கத்
தெய்வ கீதம் கேட்குது
காலையிளம் கதிர் முகத்தில்
கனிவு முத்தம் கொடுக்குது.

# விளையாட்டுக் கலைஞர்கள்

விளையாடுவது ஒரு கலை. தமதுடலுக்கு உறுதி அளித்துக் கொண்டே மற்றையோரின் உள்ளத்திற்கு உவகையூட்டி, விதிகளுக்கமைந்து, சுயநலத்தைக் கடந்து, குழு உணர்ச்சியுடன் இணைந்து, தலைவனுக்குப் பணிந்து விளையாட்டு எதிரிகளுடன் விநயமாக நடந்து வெற்றிக்கொடி நாட்டுபவர்கள் விளையாட்டுக் கலைஞர்கள். இத்தகைய கலைஞர்கள் பலர் ஒவ்வொரு கல்லூரியிலும் இருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரி வீரர்கள் மூன்று பகுதிகளாகப் பிரிந்து சென்ற ஒன்றரை மாத காலமாகப் பொலிஸ் மைதானத்தில் உதைபந்தாடினார்கள். "வெற்றி முக்கியமல்ல, கண்ணியமும் கட்டுப்பாடுமே முக்கியம்" என்ற எண்ணத்துடன் ஆடிய இவர்களின் ஆட்டத்தைக்காண ஏராளமான ரஸிகர்கள் ஒவ்வொரு முறையும் கூடினர்.

கடைசி ஆட்டம் சென்ற 8–11–58 சனியன்று நடைபெற்றது. இதுவரை எந்தக் கோஷ்டியிடமும் தோல்வியடையாத ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வீரர்களும், ஒரு தடவை மட்டும் தோல்வி கண்ட பரமேஸ்வராக்கல்லூரி வீரர்களும் அன்று மிகவுந் திறமையாக ஆடினார்கள். பதினாயிரத்துக்கு மேற்பட்ட ரஸிகர்களுக்கு அன்று ஒரு நல்ல விருந்து! ஆட்டம் முடியும் வரைக்கும் விறுவிறுப்பு குறையவேயில்லை. ஆட்டத்தின் பிற்பகுதியில் பரமேஸ்வரா வீரர்கள் மிகவும் உக்கிரமாக ஆடினர். ஆனால் கபந்தனைப் போன்று நின்ற ஸ்கந்தா "கோலி" செல்லப்பாவின் காந்தக் கைகள் ஒவ்வொரு தடவையும் பந்தைக் கௌவிக் கொண்டன. எந்தக் கோஷ்டியுமே 'கோல்' ஒன்றும் போடவில்லை குழல் ஊதப்பட்டது. ஸ்கந்தாவின் கொடி மேலெழும்பியது. ஸ்கந்தா வீரர்களைத் தோள்களில் தூக்கி ஆரவாரம் செயதனர் ரஸிகர்கள். இவ்வாண்டில் எந்தக் கல்லூரியிடமும் தோல்வியடையாததால், ஸ்கந்தவரோதயா வீரர்களே "சாம்பியன்கள்" எனத் தீர்மானிக்கப்பட்டது.

நவீன வசதிகளுடன் கூடிய நகர்ப்புறக் கல்லூரிகளின் சொத்தாக இருந்த "சாம்பியன்" பட்டத்தைத் தம் திறமையான ஆட்டத்தின் மூலம் தமதாக்கிக் கொண்ட ஸ்கந்தா வீரர்களையும், காப்டனான செல்வன் சீவரத்தினத்தையும் பயிற்சியளித்த ஆசிரியர் திரு. C. தியாகராசா அவர்களையும் பாராட்டுகின்றோம்.

*"ஈழகேசரி"யுடன் நெருங்கிய தொடர்புடையவர் நாகராஜன்: கவிதை, கதை ஆகிய இரு துறைகளிலும் கணிசமான வெற்றி பெற்றுள்ளார். 'நெஞ்சக் குளத்தில்' ஓரேயொரு பாத்திரத்தைத்தான் சந்திக்கலாம்.*

# நெஞ்சக் குளத்தில்

— இ. நாகராஜன் —

**"நா**ன் அசடு? முட்டாள்த் தனமாகப் பேசுகிறேனா?

"இல்லை! என்னை அசடாக்கித்—தமது காரியங்களைச் சாதிக்க முயலுகிறார்கள். இது சுயநலத்தின் மூடி மறைப்பு.........

"சுருவளியைக் கிளப்பி - அமைதியான நெஞ்சிலே ஆயிரம் ஆயிரம் அலைகளை எழுப்பி இன்பக் கடற்கரையிலே கட்டிய மாளிகையை அரித்துக் கரைத்து முடிவிலே அதன் சுவட்டைக் கூட இல்லாமற் செய்வது தான் அவரின் திட்டம். அத்திட்டத்திற்கு இடைநிற்கும் என்னை அசடாக்கத் தானே வேண்டும். அப்போது தான் நினைத்ததைச் சாதிக்க முடியும்"

மேலைவான விளிம்பைத் தொடச் சிறிது சிறிதாக நகர்ந்து கொண்டிருந்த ஆதவனின் பொன்வர்ணம் நெடிதுயர்ந்த குன்றுகளிலும், அருவிகளிலும், வண்ணமலர்ச் செடிகளிலும் படிந்து பலகோடி ஜீவராசிகளையும்—கவர்ந்திழுக்கும் இன்பத்தைக் காட்டி நின்றது.

உலகை - அதனுள் ஐக்கியப்பட்டு அனைத்திலும் விரவி—நீக்கமற நிறைந்து கிடக்கும் சம்பிரதாய ஊழல்களைத் துருவி ஆராய முற்படும் ஆவல் தேங்கும் விழிகளினால் வெளியுலகை நோக்கினாள் கமலி.

ஆலையின் மணியோசைக்குப் பின் வீடு திரும்பும் தொழிலாளர்கள் எறும்புக் கூட்டமாக வெகு தொலைவிற் தெரிந்தனர்.

"ஆசையோடு மனையே கின்றனர். நாளெல்லாம் பட்ட கஷ்டங்களை மறந்து—மனைவி மக்களைத் தரிசிக்க வேண்டுமென்ற துடிப்போடு செல்கின்றனர். கஞ்சியோ-கூழோ குடிக்கினும் போதும் என்ற திருப்தி உண்டு அவர்கட்கு, அமைதியும் சந்துஷ்டியும் கலந்த வாழ்க்கை அது.

"விண்தொட நிவந்த மாடி, கலைத்துவம் மிகுந்த சித்திரங்கள் அலுமாரி நிறையப் புத்தகங்கள், மேசையிற் பரவிக்கிடக்கும் அழகுப் பொருட்கள், நிம்மதியைத் தருவதற்கெனப் பணங் கொடுத்து வாங்கிய உபகரணங்கள்

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் பணியாட்கள்; இத்தனையும் இருந்தும்பயன்?

"வெறும் காட்சிப் பொருட்களே இவை. சர்க்கரை தடவிய விஷமாத்திரைகள். இன்பம் என்று கற்பனை கட்டிய பிடாரி கோவிலுக்கு இழுத்து வரப்பட்ட பலியாடு தானே!

"அமைதியை நாசமறுத்துத் தேடப் போவதுதான் என்ன?

"இறக்கை கட்டி இன்ப வானில் பறந்து திரிந்து வானம்பாடியாக இசை மிளிற்றலாம் என்று கற்பனைக் கோட்டை கட்டினேன். அது நிரந்தர கனவு தானு?

"ஒத்த குணமும்—ஒருப்பட்ட செயலும் இணைய—பாலும் சுவையுமாக, வீணையும் நாதமுமாகத் – தென்றலும் இதமும் போன்று ஒன்றித்து வாழுங்கள்!' என்று வாழ்த்திய வாழ்த்தொலி அடங்கு முன்னே—அதல பாதாளத்தில் இறங்கி விட்டால் நீண்டு கிடக்கும் எதிர்காலம்?

"நல்ல ஆசீர்வாதம்!'

"கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே வாழ்க்கை என்று அழுத்திச் சொன்னர்களே அந்த அழுத்தமற்ற முடிச்சு அவிழ்கிறதே."

"உலகம் விரிந்தது, அதிலே எத்தனையோ சம்பிரதாய நெளிவுகள் உண்டு. ஒவ்வொன்றையும் பகுத்துணர்ந்து கொள்ளவேண்டும். நிசமற்ற–தெளிவில்லாத சில சம்பவங்கள் உண்மைக்குத் திரைபோட்டு விடுகின்றன."

"இது தத்துவம்—நல்லதத்துவம்!!

"பொய்ச்சாக்கு உண்மையை ஒளிக்கக்கையாளும் தந்திரம். பெரிய மனிதர்கள் அடிக்கடி பயன்படுத்தும் உதட்டுமொழி.

"பெரிய மனிதர்களின் வாழ்க்கை மறைவிலே குவிந்திருக்கும் ஆபாசம் அநந்தம்.

"ஏன், செய்வதை ஒப்புக் கொள்கிருர்களா? இல்லையே! பேசிப்பேசிப் பூசி மெழுகுவதிற் சமர்த்தர்கள்.

"பூசி மெழுகட்டும். நாங்கள் நம்பி விடுகிறேம் என்று கருதுகிருர்கள். எங்களைப்பைத்தியம்என்றும் முடிவுகட்டிக் கொள்கிருர்கள். அதுதான் விந்தை.

"மனம்குன்றி – துன்ப நினைவுகளில் அள்ளுண்டு ரசம்பிழியப்பட்ட சக்கையாக-துரு ஏறும்வீணையாககணத்துக்கு கணம் நொந்து மெலிந்து நடைப்பிணமாக உலவ வேண்டுமென்பது நியதியா?"

ஜன்னலுக்கு வெளியே அதுவரை எழிலார்ந்து விளங்கிய இயற்கை இருளின் கோரப்பிடிக்குள் அகப்பட்டது.

பீரோவைத் திறந்துபுத்தகம் ஒன்றை எதேஷ்டை.யாகத் தட்டினுள்.

"மாலைவரை எழிலுடன் பிரகாசிக்கும் இயற்கையை இருள் அணைந்து கொள்கிறது. அதுவரை அழகுகாட்டிய குன்றுகள் கரும்பூதமாகவும், வனப்புத் தந்த செடிகள் பைசாசத்தின் ஆடையாகவும், வெள்ளியன்ன அருவி கருங் குழம்பாகவும் மாறிப் பார்ப்பவர்க்குப் பயங்கரப் பிரமையைத் தருகின்றன—

"அது நிசமா?"

"இல்லை!"

"பார்வையிற் தெரிந்த எக்காட்சியும் அழிவதில்லை. இருளின் திரை மறைக்கிறது, அவ்வளவுதான். நிச உருவை இருளால் எதுவும் செய்துவிட முடியாது—

"விடிந்து விட்டால் அவை மீண்டும் புதுமை அழகுடன் ஒளிரும். அப்பப்பா எழில் தரும் காலையின் மாட்சியே மாட்சி! அந்தி மறையாமலிருந்திருந்தால் இப்புதுமையைக் கண்டுகளிக்க முடியுமா?—

"இதுதான் வாழ்க்கை!"

"சந்தேகமெனும் மயக்கால் நிச உருவம் மறையலாம். மயக்கம் தெளிய உண்மை சுடர்விடும்."

"நெஞ்சின் அடித்தளத்தில் நம்பிக்கை அற்றுவிடின் காணுவது புகையுண்ட கண்ணாடியிற் தோற்றும் பிரதிபிம்பமே, மனிதனின் மனம் ஒரே நிலையில் இருப்பின் இதற்கு இடமேயில்லை"

"எந்தப் பிரச்சனைகளும் அணுகும் மனோபாவத்தைப் பொறுத்தேயிருக்கிறது. நிதானமும், உணர்ச்சியில் இழுபடாதவலுவும் இருந்தால் எதுவும் அசைத்துவிடா"

முன்பின் பக்கங்கள் அற்றுப்போன ஊர்பேர் தெரியாத அறிஞன் எழுதிய புஸ்தகத்தை மூடிவிட்டுக் கூடத்துக்கு வந்தாள்.

வீட்டுக்குள் வரமுற்படும் இருளை விரட்டிக்கொண்டு ஒளி விளக்குகள் விளங்கின.

"இன்று நேரத்தோடு வந்து விடுங்கள் என்றுதானே கூறினேன்"

"அதற்கு அப்படியா அசடு என்று திட்டவேண்டும்?

"கடமைக்குக் குறுக்கே நிற்கிறேனும். இதற்கு முன் இப்படி வேண்டுகோள் விடுக்கவில்லையா?

"ஊரின்—உற்றாரின்— உறவினரின் கண்களைக் குத்தும் வகையில் 'கமலி கமலி என்று குழைந்து குழைந்து என் சொல்லை ஏற்று நடந்தவர்தானே."

"மனிதனின் மனம் என்றும் ஒரே நிலையில் நிற்பதில்லை. எந்தப்பிரச்சனைகளும் அணுகும் தன்மையிலே தான் ஏற்ற இறக்கம் அடைகின்றன."

"நிதானமும் உணர்ச்சிக்கு இழுபடாத வலுவும் இருந்தால் எதையும் வென்று விடலாம்."

"இந்தத் தத்துவங்கள் வெளிப்படுத்தும் உண்மை?"

"அறிவோடு எதனையும் இணைத்து நேர்மையிற்கால்கொண்டு—முன் நடந்தவற்றைச் சீர்தூக்கின் குற்றம் நீங்கலாம்."

"எதைக்குற்றமென்று கொள்வது?

"கடமையை மேற்கொள்ளச் செல்பவரை நிறுத்துவது தவறுதானே!

கமலியின் இதயப் பாறையில் வெடித்துச் சுரந்த ஊற்றுக் கண்இது.

"எந்தத் தவறுகளுக்கும் காரணமே நான். தவறை இழைத்து விட்டு, குற்றத்தை அங்கே சுமத்துவது எனது சுயநலந்தானே!

"கூழாக மாறிய குட்டையில் எருமைகளையும் புகவிட்டு, தெளிந்த நீரை எப்படி எதிர்பார்க்கலாம். மடமை!"

ஆசுவாசத்துடன் நிமிர்ந்தாள். சுவரிற் தொங்கிய கடிகாரமுட்கள் நேரம் எட்டு என்பதைச் சுட்டிக்காட்டின.

திண்ணையிற் காலடி ஓசை. அதைத் தொடர்ந்து 'கமலி'! என்ற அழைப்பும் வந்தது.

''அரைமணியில் வந்து விடுகிறேன்' நீ காலையிற் குறிப்பிட்ட இடத்துக்குப் போகச் சித்தமாயிரு!''

''இந்த அன்புக்கட்டளை? நினைவுக்கு எட்டமுடியாத வேதனையிற் சாம்பினேனே. அதன் முடிவு இதுவா?

''நல்ல முடிவு!

''நல்ல முடிவுக்கு முன் பயங்கரப் புரட்சி. இந்தப் புரட்சியின்றி எந்த மாற்றத்தையும் காணமுடியாதா?

ஏன் இதனைப் புரட்சியென்று உருவகப் படுத்த வேண்டும். எல்லாவற்றிற்கும் வித்திட்டது நான்.

''கடிவாளமற்ற குதிரை மனதை நிறுத்தி விட்டால் எந்தவித கலகத்துக்கும் இடமேயில்லை.

''எப்படிச் சொல்லலாம்? சே! சப்பென்றுதான் இருக்கும். சுவையை உணர வேண்டுமானல் குழப்பம் அவசியம். அங்கேதான் நியாயம் புலனுகும்.

''மனேபாவம் நலமுடையதாயின் எதற்கும் இடமே வந்திருக்காது.''

''அதனை எப்படி ஒரேயடியாக நலமென்று கூறுவது?''

''உலகில் ஒளியும் வேண்டும், இருளும் அவசியம். ஒரே ஒளி மயமாக இருந்தால் இயக்கம் எப்படி நிகழ்வுறும்,

''இதுதானே வாழ்க்கை!

''ஊடல்-கூடல்; துன்பம்-இன்பம், கலக்கம் தெளிவு.

''காலாதி காலமாக - வழிவழியாக இந்தப் பண்பின் சுவட்டிலே தான் வையம் வழிநடந்து வந்திருக்கிறது. இந்த நியதி எக்காலத்துக்கும் பொதுவான ஒன்று.

''அடக்க முடியாதது மனம் - அது செல்லும் பேக்குக்கு விட்டுப்பார்ப்பது கூடாது. ஒரு நிலைப்படுத்திக் கொள்ளவேண்டும் அது தான் ஆத்மாவிற்கு வேண்டியது''

''ஞானிகள் என்ற பட்டத்துக்குப் பின் வேண்டுமானல் மனதை அடக்கி ஒடுக்கி விடலாம். இது வாழ்க்கை. காலம் கழியும்வரை அதனேடு எற்றுண்டு செல்லும் 'நான்' 'எனது' என்ற அகங்கார-மமகாரங்களில் ஐக்கியப்பட்டவனே மனிதன்.

''அப்படி அதனின்று மாறுபட்டவர்களுக்கு உலகுடன் ஒட்டிய வாழ்வு எதற்கு வேண்டும்?

''மோதிவரும் ஆசாபாசத்தில் உந்துப்பட்டு மனிதன்செல்லத்தான் வேண்டும் இந்த உந்தலுக்குப் புறம்பானவர்கள் கோடிக்கு ஒருவர்கூட உலகில் இல்லை.

''கோடியில் ஓர் அங்கமே நான்.

''கலகத்தின் சூழிலும் தெளிவின் பளிங்கிலும் கலந்து கொள்ளத்தானே வேண்டும். இதுதானே நடைமுறை வாழ்வின் வரைவிலக்கணம்.

''அவரைப் பற்றிய எனது நினைவுகள் தவறுனவை என்பதை ஒப்புக்கொள்கிறேன். நினைவை என்னிலிருந்துபிரிக்கமுடியுமா?நான்என்ற நெஞ்சிலிருந்து பிறந்த எதுவும் தவறில்லை.

'அது? நெஞ்சக்குளத்திலே எறிந்த ஒருகல். நீரில் வட்டமாகப் பரவிக் குறுகிக் குறுகி முடிவில் ஒன்றுமேயில்லாது மறைந்து விடுகிறது.''

ஆறுதலான பெருமூச்சுடன் உள் நுழைந்தாள் கமலி.

''புறப்பட்டு விட்டாயா?'' என்ற கேள்வி வாசற் புறமிருந்து வந்தது.

''இதோ......ஒரு நொடியில்....''

*ஈழநாட்டின் சிறந்த கவிஞர்களுள் ஒருவர் மஹாகவி. கொழும்பு. திறைசேரியில் கடமையாற்றுகின்றார். 'தேன்மொழி' கவிதை இதழின் இணையாசிரியராக இருந்த இவ் அன்பரது கவிதைத் தொகுதி 'வள்ளி'*

# வீசாதீர்!

**— மஹாகவி —**

ஏதோ அவதியிலே ஏகுகிறீர்; ஏன் அப்பா,
நீர்தான் உலகு நிலைமாறிப்
பாதாளத்
தாழ விழாமல் அதன்வாழ்வைக் காப்பவரோ?
வாழி, என் தாழ்மை வணக்கங்கள்;
ஆள் பொரியும்
வெய்யிலிலே நீர் செல்லும் வீதிநடைப் பாதையிலே
உய்யும் வகை தெரியா ஓர் மனிதன்,
கை இழந்தான்,
தூங்குகிறான் போலக் கிடக்கின்றான்; துன்புறுத்தி
வீங்கும் பசியால் விழுந்தானோ
ஆங்கயலிற்
கொத்தவரும் காகத்தைப் பாரும்—குறை உயிரோ
செத்த உடலோ தெளிவில்லை!
சற்றெனினும்
நில்லாது நெஞ்சில் நெகிழ்வேதும் காணாது
சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு,
செல்லுங்கால்,
வீசி விடுதல் விரும்பினீர்! வேண்டாம், ஓய்!
கூசும், அவமதித்தல் கூடாது!
ஆசை மிக
ஆதலினால் காசு கணீரென் றிட அதிரும்
காதுடையான்; அன்னான் கடுந்தூக்கம்
பாதியிலே
கெட்டுவிடக் கூடும்; கெடுக்காதீர்! பாவம், இம்
மட்டும் புவியை மறந்திருந்தான்!
கிட்டப்போய்
மெல்லக் குனிந்திடுக; இல்லையெனில் உம்பாட்டில்
செல்க; இதுவே சிறப்பு.

*நண்பர் சு. வே. நாவற்குழியைச் சேர்ந்தவர். நூற்றுக்கு மேற் பட்ட உருவகக் கதைகளை ஆக்கிப் பிரபலமானவர். இவரது தமிழ் நடை தனி அழகுடன் பொலிகின்றது.*

**உருவகக்கதை:**

# மணற் கோவில்

சு. வே

நேர்ந்து தவமிருந்து பெற்ற பிள்ளை மூடமாகி விட, அதற்காக வேதனையின் எல்லைவரை வேதனைப்பட்டு, நெஞ்சைக் கல்லாக்கி, மூலையிற் கிடத்தி விட்ட அந்த வேண்டாப் பிள்ளையைப் போல, அந்த ஊரின் தென்னெல்லையாக அந்த உப்பங்கழி கிடந்தது. கடலுமாகாது ஆறுமாகாது இரண்டுங்கெட்டானாகப் பிறந்து விட்ட தன் பிறப்பின் இழிவை எண்ணியோ என்னவோ முழுமோனத்தவஞ்செய்து கொண்டு கிடந்தது. அவ்வப்போது இரண்டொரு செம்படவச் சிறுவர்கள் நண்டு பிடிக்கும் ஆசையில் இறங்கிக்கலக்கினால் "நானும் உபயோகப் படுகிறேனா?" என்ற ஐயத்தோடு சிறு பூரிப்புக் கொண்டு சிறிது நேரந்துடிக்கும்; பின் ஊமையாகிவிடும்.

அந்த உப்பங்கழியைப் போற்றிப் பாதுகாக்க மனிதனென்ன சிருட்டிகர்த்தாவா? மனிதப் பூண்டு தலையெடுக்காத இடங்களில் மற்றெல்லாம் தலையெடுக்கும் இயல்பினால் தானோ என்னவோ அதன் இரு கரைகளிலும் தாழைகள் சோலையுருக்கொண்டு காட்சி தந்தன. அங்கு மனித வாடைவீசவில்லை; தாழம் பூவின் திவ்விய வாசனை வீசியது.

அந்த உப்பங்கழி மாரிகாலத்திலே ஊர் வெள்ளம் முழுவதையும் உண்டு, பருவ மங்கையைப் போலே பொங்கிப் பூரித்து, தன்னையறியாமலே வளர்த்து விட்ட தாழஞ் சோலையிலே உலாவி வருவதுமுண்டு. அந்தக் காலத்திலே, ஊரார் உழைப்பின் சுகம் காணும் சோம்பேறிக் கூட்டத்தின் திறமைச் சின்னங்களாக பொச்சு மட்டைகளும், ஆட்டுத் தலைகளும் கிடக்கக் கண்டு வெட்கி உடல் சிலிர்ப்

பதுமுண்டு; பக்கத்திற் கிடந்த மயான நிலையத்தைக் கழுவித் துடைத்துச் சுத்தஞ் செய்வதுமுண்டு; கோடைகாலத்திலே வைதவய கோலம் பூண்டு உடலும் உள்ளமும் ஒடுங்கித் தன்னிரு கரையுள்ளும் கட்டுண்டு கிடப்பதுமுண்டு.

அது, தன்னியற்கைத் துடிப்பின் சான்ருக தன்னிரு கரைகளிலும் இரண்டொரு வெண் மணற்றிட்டிகளை ஆக்கியிருந்தது. அவை நண்டுப் 'பிள்ளை' களினதும் ஊரிக் குழந்தைகளினதும் சித்திரசாலையாக விளங்கின.

## 2

ஒரு நாள் மாலை ஒரு தந்தையும் மகளும் அங்கு வந்தனர். அவள் ஐந்து வயதுச் சிறுமி. உலகத்துக் குழந்தைகளிடம் எத்தனையாயிரம் துடிதுடிப்புக்களும் குறு குறுப்புகளுமுண்டோ, அத்தனையும் அவளுடலின் ஒவ்வோரணுவிலும் தெறித்தன; எத்தனை எத்தனை கோடிக் குழந்தைக் கனவுகளுண்டோ, அத்தனையும் அவள் கண்களிற் சுடர்விட்டுச் சிரித்தன. அவள் வீட்டு மல்லிகைத்தோழி சிரித்துச் சிந்திய மலர்களை, தானே தொடுத்துத் தன் கழுத்திலணிந்திருந்தாள்; தலையிற் சூட்டியிருந்தாள்; கையிற்காப்பாக இட்டிருந்தாள். தன் தோழியின் சிரிப்பிலே அவளுக்குக் கொள்ளை ஆசை.

தந்தை துண்டை விரித்துக் கொண்டு அந்த மணற்பரப்பிலே அமர்ந்தார். அடுத்தகணம் அவர் நினைவு, தன்னைப்பற்றி முளைத்தெழுந்து, தன் குடும்பமாகத் தழைத்துப் படர்ந்து, அதன் எதிர்கால மென்றும் எட்டாத உயரத்தில் மலர்பூத்து, மனோகரக் கனவாகக் காட்சி தர அவர் அதனின் ஐக்கியப்பட்டார். ' அவர்'' எங்கோ சென்றுவிட அவருடல் அம்மணற்பரப்பில் இருந்தது.

ஆனால் அவர் மகளுக்கு எல்லாமே புதுமையாகத்தான் தோன்றின. அவள் ஒருகணம் தந்தையைப் பார்த்தாள்; அடுத்த கணம் உப்பங்கழியின் நீர்க்கரையில், நின்ருள். "அம்மா" எவ்வளவு தண்ணீர்" — வியப்பு அவளை விழுங்கியது. அத்தருணம் உப்பங்கழி தன் சிற்றலைக்கரங்களை நீட்டி, அவளது சீறடிகளை வருடி, கண்ணிலொற்றி, முத்தமிட்டு மகிழ்வித்தது. அதன் செய்கை அவளுக்கு வேடிக்கை; அதற்கு இன்ப வேதனை; அவள்

மெல்ல மெல்ல நீரினுள் இறங்கினாள். அதனுள் குதித்து அளைந்து விளையாட அவளுக்கு ஆசை; அணைத்துச் சுகம் பெற அதற்கு ஆவல். அப்பொழுது அவள் தனது சுண்டு விரலை நீரிலே தோய்த்து நாக்கில் வைத்தாள். "ஐயோ பச்சை உப்பு... தூ ... தூ...." உப்பங்கழி வெட்கியது; பிறவிக் குணத்தை மாற்ற அதனால் முடியுமா, என்ன?

அவள் கரையேறினாள். உப்பங்கழி, தென்றலுந் தானும் சேர்ந்து தொடுத்த வெண்ணுரை மாலைகளை அணியணியாகக் கரைக்குச் சூட்டி அழகு பார்த்தது. அந்த வெண்ணுரையிலே துடித்த குமிழிகள் கண்சிமிட்டி அவளை அழைத்தன. பலவண்ணக் கோலங் காட்டி அவளை மயக்கின: அவள் மயங்கினாள். அவள் தன்னிரு கைகளாலும் நுரையை வாரி அள்ள, காற்றுத் தோழி அதனை வாங்கி ஊதிப் பூம்பந்தாடினாள். திரள் திரளாக அவை பறந்து மறைந்தன. மீண்டும் மீண்டும் அவளுந் தோழியும் நுரையை வீசி வீசி விளையாடி மகிழ்ந்தனர். அவர்கள் விளையாட்டிலேயே விளைந்த ஒரு நுரைக் கொத்து, பறந்தோடிப்போய் அப்பாவின் கன்னத்தை முத்தமிட்டது. "சீ இதென்ன விளையாட்டு" அப்பா முணு முணுத்துவிட்டுப் பழைய அப்பாவாக மாறினார். அவள் முகத்திலே ஒரு கருந்திரை நிழலிட்டு மறைந்தது. அந்த விளையாட்டும் நின்றது. இனி....

குழந்தையின் கற்பனைக் கனவுக்கு உலகில் இல்லாதது எதுதான் இல்லை! கடலரசியைப் போல தன் மடி நிறைய அழகொழுகும் பல பண்டங்களை வாரி வழங்க உப்பங்கழிக்கு ஏது தகுதி. ஏதோ தன்னாலியன்ற பலவர்ணச் சிப்பிகளையும் ஊரிகளையுந்தாம் வாரி வழங்கியிருந்தது அஃது. யாரும் விரும்பாத அவை அவளுக்கு மாணிக்கமாய் மிளிர்ந்தன; அவளது மடியில் கிடக்கும் பெரும் பேறு பெற்றன.

இனி...

அப்பாவுக்கு அருகிற் கிடந்த சிறு மணல் மேடு அவளைக் கவர்ந்தது. "சொரு சொரு" என்ற மணலின் தன்மையும் ஒட்டியும் ஒட்டாமலும் இணைந்து நின்ற தண்மையும் அவளுக்கு வெகு சுகமளித்தன. அதிலே கிடந்து புரண்டு விளையாடி

ளுலோ — ஆசை, அப்பாவின் பயத்தால் அறுந்து விழுந்தது. கையை மணலிற் புதைத்து, ஊன்றி, கிண்டிக் கிளறி அந்த ஆசையைத் தணித்தாள். அப்போதுதான் ஈரமண் அவள் கையிற்பட்டது.

3

அப்பொழுது....

நெற்றிப் பொட்டிலே, எங்கும் நிறைந்த அந்த ஒன்றை நிறுத்தி, தன்னையும் உலகையும் மறந்து, அதுவே தானுய்க்காணும் யோகியானுள் அவள். ஒரு கணநேரந்தான் அந்த நிலை. அந்த ஒரு கணத்திலே அவள் கற்பனைக் கன்னியாக மாறி, அவன் காட்டிய தொரு சிற்பக் கோவிலைக் கண்டாள்.

அவள், அவளான போது, அவள் கைகள் ஈரவெண்மணலைச் சாந்தாக்கிக் குவித்தன. அவள் ஸ்தபதியாக மாறி மூலஸ்தானமும் ஸ்தூபியும் கட்டத் தொடங்கினுள். ஈரமணலைக் கோபுர வடிவிற் குவித்து, அது சொரிந்து விழா வண்ணம் சிறு தட்டுக் கொடுத்து இறுக்கிய பின்னர், சிப்பியையும் ஊரியையும் கொண்டு சிற்ப சித்திர வேலைகள் செய்தாள்; கோபுரத்தின் கிழக்குப் பகுதியிலே தன் கையளவான இடத்தைக்குடைந்தெடுத்தாள். அதுதான் கற்பக்கிருகமாம். கற்பக்கிருக வாயிலுக்குப் பக்கத்திலே, தெற்கு வடக்காக இரு சிறு சுவர்கள் எழுபப்பட்டன. புன்னைமரத்து இலையிரண்டு மேலே பரப்பப்பட்டு, மூடுசாந்தும் இடப்பட்டது. அதுதான் சந்தன மண்டபமாம். சந்தன மண்டபத்திற்குச் சித்திர வேலைகளும் முடிந்தன. இனி மதில் வேண்டாமா? சிறிது நேரத்தில் தெய்வத் தச்சனின் சிருட்டிபோலே மதில்கள் எழுந்தன. அவற்றினுச்சியில் ஊரிகளின் நுனிகள் வரிசையாக நின்று ஈட்டிப் படைகளாகிக்காத்தன. கோவில் நிர்மாண வேலை முற்றுப்பெற்ற அப்போதே, மண் தோண்டப்பட்ட அந்த வட்ட வடிவான குழியும் திருக்குளமாயிற்று. உப்பங்கழியின் உப்பு நீர் சிரட்டையொன்றின் மூலம் திருக்குளத்தை அடைந்து பவித்திர தீர்த்தமாயிற்று. இனி, சுவாமி ஒன்றை உள்ளே வைத்து விட்டாற் கோவில் உயிர் பெற்று விடும்.

வகைதெரியாது எங்கிருந்தோ அங்கு வந்து கிடந்த பனையோலை, நறுக்கின் சிறுதுண்டொன்றை எல்லாம் வல்ல இறைவனுக்கி அதை அவள் மூல ஸ்தானத்திற் பிரதிட்டை செய்தாள். இறைவனின் கல்யாண குணங்களைப் போலே அவள் மனதில் மகிழ்வின் பூரண எழில் நிறைந்தது; அவள் பொங்கிப் பூரித்தாள்;சிரித்தாள். தான் அணிந்திருந்த மாலையைக் கழற்றி, அம்மலர்களைத் திருவீதி எங்கும் பரப்பினுள்.

தன் குழந்தையின் சிறுகை தீண்டுதலும்அப்பாவின் உணர்வு விழித்தெழுந்தது. அவர் மகளைப் பார்த்தார்.

"அப்பா"

"என்ன போவோமா?"

"வேண்டாம்"

அவள் அப்பாவிற்குத் தன் படைப்பைக் காட்டினுள். திருக்கோவில், திருக்கோபுரம், திருமதில், திருக்குளம் எல்லாவற்றிற்கும் மேலாக தெய்வம்;— அப்பா சிரித்தார்.

"கும்பிடப்பா"

அப்பா துண்டை அரையிற் கட்டிக் கொண்டு பயபக்தியோடு கும்பிட்டார்.

அவளும் கும்பிட்டாள்.

"சாமி அப்பு" அம்மாவையும் அப்பாவையும் காப்பாத்திக் கொள்; என்னையும் காப்பாத்திக்கொள்;அவள் வார்த்தைகள்" வேத மந்திரங்கள் போலே வாய்மையும் தூய்மையும் பெற்று, அந்த மோன வேளையிலே படிகத் துண்டு போலே தெளிவும் பெற்று ஒலிவடிவாகி உலகையே காக்கப் புறப்பட்டன.

அப்பாவால் பொறுக்க முடியவில்லை. அவர் மனதில் உணர்ச்சிப்பிரளயம்பொங்கி எழுந்து உடல் முழுவதையும் தாக்கிநெகிழச் செய்தது; கண்ணீர்த் துளிகள் உருண்டு சிதறின.

அப்பாவும் மகளும் சென்றனர்.

அப்பொழுது ஒருவன் வந்தான்

நாலைந்து நாட்களாக அவனுக்கும் அந்த உப்பங்கழிக்கும் ஏதோ தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. மாலை மனேகாத்தை அனுபவிக்க அங்கே வந்து அதே மணற்பரப்பில் இருப்பான். தனிமை பரிபூரணமாக ஊறித் தெவிட்டிய உப்பங்கழிக்கு அவன் வரவு சிறிது ஆறுதல் தந்தது. இன்றும் அவன் வந்தான். அந்த மணற்பரப்பை நோக்கிச் சென்றான். 'சீச்சீ' இது யார்

செய்த கும்மாளம், ஈரமணலைக் கிண்டிக் கிளறிப் பேர்தாக்குறைக்குத் தண்ணீரையும் தேக்கி. கோவிலாம்; குளமாம்! - அவன் மனம் வெறுப்பை உமிழ்ந்தது; தட்டிச் சமப்படுத்தி விட்டால் நாளைக்காவது உபயோகப்படாதா என்று எண்ணியது. நினைவு செயலாக, அவன் கால்கள் அதை நிறைவேற்றத் துடித்தன. அடுத்த கணம்......

கோவிலின் திருமதிலோரத்தை அவன் கால் தீண்டியது. உப்பங்கழி என்றுமில்லாத வகையில் 'ஆ' எனக்கத்தியது! 'அப்பனே, நில்; நில்' என ஒரு குரல் கணீரென ஒலித்தது! அவன் பிரமித்துப்போய் அங்குமிங்கும் பார்த்தான்.

'அப்பனே, கோவில் அழித்த, பழியைச் சுமக்கப்போகிறாயா?, மீண்டும் ஒலித்தது அந்தக்குரல். குரல் கொடுத்தது, அந்த உப்பங்கழியா? மணலா? கோவிலா! கோவிலினுள்ளே ஓலைத் துண்டுருவிற் கிடந்த 'அது' வா? அல்லது அவை எல்லாமா?

அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது; உரக்கச் சிரித்தான். 'ஏன் சிரிக்கிறாய்? புதுமைப் பேர்வழியாயிருக்கிறாயேநீ. உனக்கு இங்கென்ன வேலை?" அந்தக் குரலில் எள்ளனமும், அதிகாரமும் கலந்தொலித்தன. "எனக்கென்ன வேலையா...... ஆச்சரியமாயிருக்கிறதேகேள்வி அதோ பார் வானத்து விந்தையை. செங்கதிர்ச் செல்வன் தன் கடைசி மூச்சுள்ள வரையும் காட்டும் மாயாஜால வித்தைகளைப் பார். தங்கமுருக்கித் தழலாக்கி, அனல் குறைத்து, செம்பொற்சோதியாய் அவன் சுழன்றாடும் ஆட்டத்தைப் பார். அந்திப் பெண் சிந்திவிட்ட அழகு விருந்தைப் பார். மாலை மங்கையின் சௌந்தரியப் பொலிவைப் பார். ஆகா சிறிது நேரத்தில் வெண்ணிலவு மேகக் குழந்தைகளுடன் ஓடி விளையாடத்தொடங்கி விடும். வானத்துத் தாரகைகள்கண்சிமிட்டி உலகை எள்ளனஞ் செய்யும். நீலவானப் பொய்கையிலே..." "அபாரம் அற்புதம். ஓகோ, நீ ஒரு கலைஞனா? தம்பி; கற்பனை செழிக்கிறதே!"

"கற்பனைதான் நான்; நான்தான் கற்பனை"

"அப்படியா? நீ விண்ணில்தான் சஞ்சரிப்பாயோ?"

"ஆமாம் வானப் பெருவெளி தான் எங்களுலகம். அங்கே சிறகடித்துப் பறந்து பரவெளியைக்கடந்து, அண்டமுகட்டைத் தொட்டு அதற்கும் அப்பாலாய் .......அப்பாலாய் ..."

'அப்பனே கீழே இறங்கி வா; என் நீ மண்ணைப்பார்ப்பதில்லையோ ?"

'மண்ணையா? மண்ணிலே என்ன இருக்கிறது"

"பார்க்கத்தெரிந்தால் எத்தனை எத்தனையோ உண்டு. ஏன் இந்த மணற்கோவில் ஒன்றே போதாதா?"

"உம்... மணற்கோவில் ...... அதில் என்ன இருக்கிறது"

"நீ தேடித்திரியும் 'கலை' இருக்கிறது."

அவனையும் மீறிச் சிரிப்புவந்தது. அடக்கிக் கொண்டு கேட்டான்.

"இந்த மணற் கோவில் ஒரு கலா சிருட்டியா?"

"அதிலும் சந்தேகமா? இதன் சிருட்டிகர்த்தாவின் உள்ளமோ பளிங்கு; உணர்ச்சியோ தூய்மை; கற்பனையோ – அதுவே கற்பனை உரு. அதன் படைப்பு இக்கோவில்; உயிர் நான். கலைக்குத்தாய் அது; கலைபிறந்த கதை இது; சாட்சிகள் அதோ..."

உப்பங்கழி 'ஓம் ஓம்' என்றுரைத்தது.

வெண்ணுரை அவன் காலடிக்கே வந்து 'சரிதான்' என்றது. சிப்பிகளும் ஊரிகளும் 'மண்ணே முக்கியம்' என்றன. மல்லிகை மலர்கள் 'மண்ணின் கனவே நாங்கள்' என்று முறுவலித்தன.

அடிவானத்திலே செம்பரிதியைக் கௌவிய மேகத்திரளிலிருந்து மின்னற்கொடியொன்று துடித்து நெளிந்து மறைந்தது. அவன் அறிவிலும் பளிச்சென ஒரு மின்னல்.

கலைஞன் கலைஞனுனன்.

---


# 'கலைச் செல்வி'

## ஆண்டுச் சந்தா ரூபா 4.

**உங்கள் சந்தாவை உடனே அனுப்புக.**

**கலைச்செல்வி :: சுன்னுகம்.**

*கிழக்கு மாகாணம் தமிழுலகிற்களித்த கவிஞர்களுள் "திமிலைத்துமிலனு"ம் ஒருவர். புதிய கருத்துக்கள் இவர் கவிதைகளில் பொதிந்து கிடக்கும். "தாரா—என் தங்கை" வீரகேசரியில் வெளியான காவியத்தொடர்.*

# குயிலின் குரல்

**... திமிலைத்துமிலன் ...**

செங்கதிரோன் மின்பனியில் தங்கமுலாம் பூசும்
செழுமை தவழ் மாஞ்சோலை சிரித்ததெழில் பொங்க
பொங்கிவரு மின்பநிலை கண்டதவளுள்ளம்
பொன்னிளமை பூக்கவொரு புன்னகை புரிந்தாள்
"எங்கு இது! இந்த எழில்?" என்றுமவன் நோக்க
"இன்னுமொரு கங்குலிலே தெரியுமது" என்றாள்.
துங்க எழில் நங்கையுடல் தாய்மை யுணர்வோங்க
துருதுருத்த பார்வையிலே துடித்ததொரு நாணம்.

"இந்த இளங் கொம்பரிடை இயற்றவா கூட்டை
இதற்காக ஏனிந்த நாணமோ?" என்றான்
"சொந்தமதி லுங்களுக்குத் தெரியுமோ?" என்றாள்
"சொல்லவோ செய்யவோ துடியிடையே!" என்றான்.
"இந்தமதி உங்களுக்கு ஏன்?" என்று கேட்டாள்
"என்ன இது புதுமை?" என ஏங்கியவன் நின்றான்.
புந்திபுகைந் தொன்றியெழு புரட்சிநிலை கொண்டாள்
"புதுமைக்கு மிளமைக்கு மிதுசரியோ?" என்றாள்,

"இளமைக்கு ஏது இது இடைஞ்சலோ?" என்றான்
"என்னாலே ஏலாது என்னழகு குன்றும்
வழமைக்கு மாறென்று சொன்னாலுமேரேன்
மகிழ்வுக்கு மெங்களுக்கு வழியில்லை!" என்றாள்.

"குழவியொடு பழகுவது குற்றமோ? பெற்ற
குமரிக்குத் தன் குழந்தை பாரமோ?" என்ருன்.
"இழவுக்கு ஏலாது என்ருலே இங்கே
எங்கே நீர் கண்டதிதை?" என்றவள் கடிந்தாள்.

"கோபமேன் என்மீது குயிலி இனியாளே!
குடிப்பெண்கள் வழமையது என்றுதான்" என்ருன்.
"பாவமே! அவ்வளவு போதுமெனக்" கென்ருள்
பறந்து ஒரு காக்கைப் பதுக்கையறை சென்ருள்.
"தாபமினி யில்லேயே தனியாக இன்பத்
தளிரெங்கும் சுற்றித் திளேக்கலா" மென்ருள்
"வாபோவ" மென்று மனமொன்றி வழி சென்ருர்
மகிழ்வான காதல் மொழி-வார்த்தைகள் புகன்ருர்.

கோலமுது வேப்பினிடை. கூட்டினிலே கண்டார்
"கூ!" வென்று ஓலமிட்! லறியது குஞ்சு
சோலேவழி தங்கிவரு காக்கைபல கொத்த
சோர்ந்துமிக வீழ்ந்து எழுந்தோடியது கண்டார்.
"சீலமிது?" என்றுமவள் திங்கள்மதி நோக்க
சீர்கெட்ட கொள்கையிது" என்று மொழி தந்தாள்.
"ஞாலமதி கெட்டன" நயம்பட உரைத்தாள்
"நல்லவழி நம் குழவி நாம் வளர்ப்ப" தென்ருள்

இப்போது வந்ததா புத்தியடி! என்ருல்
'இயலாது கூடுகட்ட" என்றவன் மொழிந்தான்.
'அப்பப்பா, எந்தன் விதி!" என்றுமவள் நொந்தாள்
ஆளுலுமவன் மறுத் தப்பாலே சென்ருன்.
இப்பாரை நோக்கியவள் இப்படி யுரைத்தாள்
"இன்றுமது நாம் கேட்கும் இனிய குயிலோசை!
"செப்புகிறேன், யான் அபலே, பெண்கள் கேளீரே!
'சிண்' ஒன்று வேண்டா நம் செல்வரை வளர்க்க"

*இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் இந்த எழுத்துத்துறையில் கற்றுக்கொண்டு வந்திருக்கிறேன். இப்போது அது எனக்குச் சோறு போடும் சாதனமாக ஓரளவு கை வந்து விட்டபோதிலும், இன்னும் அது வண்ணானின் சலவை போன்ற தல வித்தையின் அந்தஸ்தைப் பெறவில்லையென்று நினைக்கிறேன்——......"*

# "எழுத்துலகில் நான்

**சோ. சிவபாதசுந்தரம்**

"எழுத்துலகில் நான்" என்ற தலைப்பில் கட்டுரை வேண்டுமென்று "கலைச்செல்வி" ஆசிரியர் வேண்டுகோள் விடுத்துள்ளார். "நான்" என்னும் அகந்தையை ஒழிக்க வேண்டுமென்று பெரியவர்களெல்லாம் நமக்குப் புத்திமதி சொல்லியிருக்கும்போது, அதனை நிலைநாட்டவேண்டுமென்றுஆசிரியர் விரும்புவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

இருந்தபோதிலும், வேறொரு வகையில் இது எனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தையளித்திருக்கிறது என்றுசொல்ல வேண்டும். 'நான்' என்ற அந்தப் பண்டத்தைச் "சத்திரசிகிச்சை"செய்து பார்க்கவும், என்னுள் கிடந்து திண்டாடும் சில எண்ணங்களை வெளியேற்றவும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

நான் ஓர் எழுத்தாளன் என்பதைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை. புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். பிரசுரகர்த்தாக்கள் எனது எழுத்தை விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். மற்றவர்கள் "நீங்கள் எழுத்தாளன் தான்" என்று சாட்சி சொல்லியிருக்கிறார்கள். இந்த அளவை கொண்டு பார்க்கும் போது நான் ஓர் எழுத்தாளன் என்பதில் நான்எப்படிச் சந்தேகங்கொள்ள முடியும்? ஆனல், நான் 'எப்போது' எழுத்தாளனாக உருப்பட்டேன், 'எழுத்துலகத்திலே' எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தேன் என்ற கேள்விகளுக்கு மாத்திரம் என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஒரு கலாசாலையில் படித்து பட்டம் பெற்றவரைப் 'பட்டதாரி' என்று சந்தேகமறச் சொல்லி விடலாம்-அவருக்குத் தராதரப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கும். ஆனல் எழுத்தாளனுக்கு யார் பட்டம் வழங்குகிறார்கள்? 'பெரிய மனிதர்' மாதிரி எழுத்தாளனுக்கும்அளவு கோல் கிடையாது. உத்தேசப் பிரமாணத்தைக் கொண்டு வகைப்படுத்தும் போது பெரிய பெரிய ஆபத்துக்கள் எல்லாம் சூழ்ந்து விடுகின்றன.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் படித்த பள்ளிக்கூடத்தில் எனது பாடப்புத்தகங்களிலொன்றிலே ஆங்கிலப் புலவர் "கிரே" என்பவர் எழுதிய எலெஜி என்று சொல்லப்படும் கல்வெட்டுக்கவி பாடமாயிருந்தது. ஆங்கில மொழி பயிற்றிய ஒரு வெள்ளைக்காரர் நன்ருகத்தான் கற்பித்தார். இருந்த போதிலும் எனக்கு அது திருப்திதரவில்லை. ஏற்கனவே பல வருடங்கள் தமிழ் மூலம் கல்வி கற்றதாலும் தமிழ் இலக்கியங்களில் ஊடாடியதாலும் ஆங்கிலத்தில் சிந்தித்து ஆங்கில இலக்கியத்தை ரஸிக்க என்னுல் முடியவில்லை. ஆகையால், ஒருவருமறியாமல் உட்கார்ந்து அந்த "எலெஜி" யைத் தமிழிலே கவிதையாக்கிப் படித்துப் பார்த்தேன். சட்டென்று ஒரு புதிய ரஸனை ஏற்பட்டது. எனது சக மாணவர்களுக்கு உட்கார்ந்து "பாடம்" சொல்லிக் கொடுத்து அவர்களுக்கும் ஆங்கில இலக்கியத்தைச் சுலபமாகக் கற்கும் வழியைத் காண்பித்தேன். தமிழிலே அதிக ஈடு பாடு கொண்டிருந்த காரணத்தால் எனது சக மாணவர்கள் என்னைப் "பண்டிதர்" பட்டம் சூட்டி அழைக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுதே நான் எழுத்தாளன் ஆகிவிட்டேனு? கிடையாது.

அந்தக் காலத்திலே நவசக்தி, தமிழ்நாடு, ஆநந்த போதினி, ராமசாமி நாயக்கரின் குடியரசு முதலிய பத்திரிகைகளை என் தந்தையார் வாசிப்பது வழக்கம். தமிழ் வெளியீடுகளில் பாரபட்சம் காட்டாதவர் அந்த மனுஷர். அவற்றை நானும் விடாமல் படித்து, ஆநந்தபோதினியில் வெளி வந்த ஆரணி குப்புசாமி முதலியாரின் நாவல்களைப் போல நானும் எழுத வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. ஒருவருமறியாமல் பல தடவை கத்தை-கத்தையாக எத்தனையோ 'நாவல்களை" எழுதிப்பார்த்து, அவை யெல்லாம் குப்புசுவாமி முதலியாரின் சரக்கின் இரவல் போலத்தெரிந்தவுடன் கிழித்தெறிந்து விட்டேன்?

தொடர்ந்து அமிர்த குணபோதினி, செந்தமிழ்ச் செல்வி, ஆநந்த விகடன், பிரசண்ட விகடன், ஈழகேசரி, வீரகேசரி முதலியன வந்தன. அவற்றைப் படிக்கும் போதெல்லாம் நானும் எழுத வேண்டும், பத்திரிகையில் பெயர் வரவேண்டும் என்ற ஆவல் எழுந்தது நான் எழுதி எழுதிப்பார்த்தேன், ஆனுல் வாசகர்கள் - பத்திரிகாசிரியர்களல்ல - என்னுடைய கதைகளையும் - கட்டுரைகளையும் பார்த்து விட்டு இரவல் கருத்து, இரவல் காட்சி என்று சொல்வார்கள் என்ற பயம் ஏற்படும் போது பத்திரிகைக்கு அனுப்பாமல் கிழித்தெறிந்து விடுவேன் எனது எழுத்துக்கள் பத்திரிகைகளில் வெளி வருதற்கு முன்னரே நான் வாசகர்களுக்குப் பயப்பட்டேனல்லாமல் பத்திரிகாசிரியருக்குப் பயப்படவில்லை. இரவல் சரக்கென்பதை எல்லாப் பத்திரிகாசிரியர்களும் உடனே கண்டு பிடித்து விட மாட்டார்கள்; ஆனுல் வாசகர்களை ஏமாற்றமுடியாது. -ஆபத்தில் முடியுமென்பது எனக்கு எப்படியோ தென்பட்டது. அப்படி

அகப்பட்டு முளையிலேயே வாசகர்களால் நசுக்கப்பட்டால் ஒரு போதும் முன்னுக்கு வர முடியாதென்று தெரிந்தது.

ஆனால், இந்த நிலையில் நான் எழுத்தாளனாகி விட்டேனா? அல்லது, எழுத்தாளனாக உருப்பட ஏதாவது அறிகுறிகளிருந்தனவா? நான் நம்பவில்லை.

முதன் முதலில் நான் பத்திரிகையில் எழுதி அச்சில் வந்தது கதையுமல்ல, கட்டுரையுமல்ல — அது ஒரு "கடிதம்" என்று ஞாபகம். பொல்லாத இலக்கணப்புலி சுவாமி ஞானப்பிரகாசருக்கு ஒரு மறுப்பு? அலங்கோலமான ஒரு பதில். இப்போது நினைத்துப் பார்த்தால் வெட்கமாயிருக்கிறது; ஆனால் "ஈழகேசரிப் பொன்னையா" பிரசுரித்து விட்டார்! அச்சிலே என் பெயர் வந்தது. எனக்குப் பெருமை! ஆனால் மறுவாரமே சுவாமியார் நீண்ட பதில் விடுத்தார்! என் கடிதம் வெளியிடப்பட்டது பெரிதல்ல, வணக்கத்துக்குரிய சுவாமிகள் என்னையும் ஒரு பொருளாக மதித்துக் கண்ணியத்துடன் பதில் கட்டுரை பிரசுரித்தது ஒன்று, நானும் இலக்கணப்புலியாகி விட்டேன் என்று ஒருதிமிரும், மற்றது நானும் பத்திரிகையாகிய சங்கப்பலகை ஏறி விட்டேன் என்ற பெருமையுமளித்தது. வாசகர்கள் சிரிப்புக்கு ஆளாக வேண்டி ஏற்படாமல், அதைக் கடந்து விட்டேனென்னும் மகிழ்ச்சி.

ஆனால், நான் எழுத்தாளனாகி விட்டேனா? அது தான் இல்லை.

தைரியம் பிறந்து விட்டது. ஈழகேசரிக்கும் வீரகேசரிக்கும் எழுதினேன், திருப்பி அனுப்பாமல் பிரசுரித்தார்கள். (பணம் கொடுக்காத காலம் ஆகையால் தாரதம்மியத்தை அவர்கள்பார்க்கவில்லைப்போலும்!) பின்னர் ஒரு நாள் ஒரு சாதாரண கதையை எழுதி, பத்துத் தடவை திருப்பி எழுதி, ஆனந்த விகடனுக்கு அனுப்பிப் பார்த்தேன். பலநாள் பதிலில்லை. ஏமாந்தவனாய் மறந்து போயிருக்கும் ஒரு நாளில் திடீரென அது வெளிவந்தது! எனக்கோ தலைகால் தெரியாத "புளுகம்". அத்துடன் நிற்கவில்லை. ரூபா இருபத்தைந்துக்கு ஒரு செக்கும் வந்தது! இருபது வருடங்களுக்கு முந்தியகதை இது.

பத்திரிகைக்கு எழுதுவது பொழுது போக்காக வைத்துக் கொண்டிருந்த நான் 1938-ல் ஈழகேசரியின் பிரசுரத்தைக் கவனிக்கச் சென்ற போதுதான் எழுத்துத் தொழிலின் இன்பத்தையுணர்ந்தேன். மூன்றோ நாலு வருஷம் அது ஒரு யோக சாதனை. எழுதி எழுதிப் பேனா முனை தேய்ந்தது. "எழுத்தாளன்" என்ற சொல்லுக்கு நீங்கள் என்ன பொருள் சொல்வீர்களோ எனக்குத்தெரியாது. அந்தக் காலத்தில் புதுமைப் பித்தனும், கு. ப. ராசகோபாலனும், வ. ராவும், கல்கியும் கி. வா. ஜகந்நாதனும், தேசிக விநாயகம் பிள்ளையும், மற்றவர்களும் என் "சொந்தக்கார" ரானார்கள். ஆகையால் நானும்எழுத்தாளனாகி விட்டேனா? இருக்கலாம் என்று ஓர் எண்ணம் கொஞ்சம் ஏற்பட்டது. ஆனால் நம்ப முடியவில்லை.

பின்னர், பத்திரிகையிலிருந்து ரேடியோவுக்குள் குதித்தேன், பத்து வருடங்கள் ஒலிபரப்பினேன். எழுத்தாளனாயிருந்து பேச்சாளனாகமாறிவிட்டேன் என்று நீங்கள் கருதலாம். அப்படிக்கருதுவீர்களானால் பெரிய தப்பு. உண்மையில் நான் எழுத்து வித்தையில் நம்பிக்கை கொண்டது ரேடியோ எனக்குத்தந்த சந்தர்ப்பத்துக்குப் பிறகு தான் என்று சொல்ல வேண்டும்! அநாமதேயமாகப் பத்து வருடகாலம் எழுதி எழுதி ஒலிபரப்பிய பேச்சுக்கள், விமர்சனங்கள், நாடகங்கள்,ஒலிச்சித்திரங்கள்—இவை யாவும் அச்சில் வந்திருந்தால்? இந்தச் சாதனை தந்த அனுபவம்தான் இன்று நான் தைரியமாக எழுதுவதற்கு உதவுகிறது.

பத்திரிகைச் சாதனத்துக்கு எழுதுவதை விட வானொலிச் சாதனத்துக்கு எழுதுவது மிகச் கடினமான காரியம் இதை வாசிக்கும் நீங்கள் ஒருவேளை "எழுத்தாள" ராயிருக்கலாம். உங்கள் கட்டுரை ஏதாவது பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தால் அதை வானொலியில் யாராவது ஒருவரைக் கொண்டு வாசிக்கச்சொல்லி, உங்கள் வீட்டிலிருந்து கேட்டுப் பாருங்கள்: அப்பொழுது தெரியும் உங்கள் கட்டுரையில் காணப்படும் பல தவறுகள்? வார்த்தையமைப்பு, பொருள் வைப்பு, வசன ஒழுங்கு. சிந்தனைத் தொடர்ச்சி— இவையெல்லாம் செம்மைப்பட வேண்டுமானால் வானொலிச் சாதனத்தை விட வேறு சிறந்த சாதனம் இல்லையென்று நான் நம்புகிறேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் இந்த எழுத்துத் துறையில் கற்றுக் கொண்டு வந்திருக்கிறேன். இப்போது அது எனக்குச் சோறு போடும் சாதனமாக ஓரளவு கைவந்து விட்ட போதிலும், இன்னும் அது வண்ணானின் சலவை போன்ற, குல வித்தையின் அந்தஸ்தைப் பெறவில்லையென்று நினைக்கிறேன்.

---


# S. R. பீடி, செய்யது பீடி

**உயர்ந்த ரக புகையிலையினால் சுத்தமாகத் தயாரிக்கப்பட்டவை!**
**காரம், மணம், குணம் ஆகியவை ஒருங்கே அமைந்தவை!!**
**தொண்டைக்குக் கெடுதல் செய்யாதவை!!!**

இனிமையும் எழிலும் நிறைந்த,

## S. R. பீடி, செய்யது பீடிகளை

எல்லோரும் விரும்பி பாவிக்கின்றனர்.
நீங்களும் இன்றே பாவியுங்கள்.

**எங்கும் கிடைக்கும்.**

**S. R. பீடி. செய்யது பீடி**
வடமாகாண ஏஜன்ட்,

## கபே நவஜீவன்

நம். 132, K. K. S. றோட், யாழ்ப்பாணம்.

*விபுலானந்த அடிகளாரின் தமிழ்த் தொண்டினைப் போற்றுவதற்த மட்டுந்தானு மணிமண்டபங்கள் எழுந்தன? அடிகளாரின் சைவப் பணியும் அளவிடற்கரியது. அது சமரசப் பண்பிற்கு முரண்பட்டதல்ல என்பதை வலியுறுத்துகின்ருர் மட்டக்களப்பு பண்டிதர் நாகலிங்கம்.*

# சுவாமி விபுலாநந்த அடிகளும் மணி மண்டபமும்

### [ம. நாகலிங்கம்]

**ப**ண்டைத் தமிழர்கள், போரிலே பட்ட வீரர்கட்குக் கல் நாட்டி விழா வெடுத்தனர். கற்பிற் சிறந்த மகளிர்க்குக் கோவில் அமைத்து வழிபாடாற்றினர். இங்ஙனம் நினைவுச்சின்னங்கள் எழுப்பிப் போற்றுகின்ற பண்பு தமிழர்க்குப் பரம்பரையாக வந்ததாகும். இக்காலத்திலே எட்டயபுரத்தில் அமரகவி பாரதியாருக்கு நினைவுச் சின்னமாகத் தமிழகம் ஒரு மணி மண்டபம் அமைத்தது. ஈழத்திலே நாவலர் பெருமான் நினைவாக கலைக் கூடங்களும், சுவாமி விபுலாநந்த அடிகளார் நினைவாக மணிமண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

நினைவுச் சின்னங்கள் எழுப்பப் பெற்றுப் பொது மக்கள் பாராட்டுதலுக்குள்ளாவதென்பது அன்றும் இன்றும் அவ்வளவு இலகுவாக இருந்ததில்லை. இராமாயண விழாவை ஓர் புறம் எடுத்தால் கீமாயண விழாவை மற்றோர் புறம் எடுப்பர். கட்டப் பொம்மன் ஓர் சிறந்த தேச பக்தன் என்று ஒருவர் பாராட்டினுல், மற்றொருவர் அவனைப் போல் கொடிய கொள்ளைக்காரன் கிடையாது என்று தூற்றுவர்.

இங்ஙனம் பலவித சர்ச்சைகள் நடக்கும் காலத்தில் நாம் கூற வந்த விபுலாநந்த அடிகள் பேரில் எங்ஙனம் நினைவுச் சின்னங்கள் எழுந்தன? அடிகளார் பிறந்த மட்டக்களப்பு நாட்டில் மாத்திரம் மூன்று

மணிமண்டபங்கள் எழுந்து விட்டன. தமிழகத்தின் முன்னை நாட் கல்வி மந்திரி திரு. அவி னுசிலிங்கம் செட்டியார் அவர்களே அத்திவாரக்கல்லினை நட்டுச் சிவாநந்த வித்தியாலயத்தில் ஒரு மணிமண்டபத்தை எழுப் பத் தூண்டினுர். இவ்விதம் தமிழகத்தும்ஈழநாட்டகத்தும்உள்ள மக்களைக் கொள்ளை கொள்ள அடிகளிடம் காணப்பட்ட மா பெரும் சக்திதான் என்ன? இவ்வினவுக்கு விடைகாணுவது அவ்வளவு கடினமாக இருக்க முடியாது. ஏனெனில் அடிகளாரிடம் நிறைந்து வழிந்த தமிழ்ப்புலமையை யார்தான் அறியாதிருப்பார். பன்மொழிப் புலமை வாய்ந்த அடிகளார்தம் தாய்மொழியைத் திறம்பட ஆய்ந்து ஆற்றிய சேவை மதிப்பிடற் கரியதன்ருே. தூய அறிவோடு, துறவு நிலையும் ஒன்றியிருந்தது தமிழ் மக்கள் செய்த தவப்பயன் அல்லவா? துறவியாகிய அடிகளார் நுழைந்து திளைத்து ஆடிப் பெற்ற இன்பத்தின் பயனன்ருே மதங்க சூளாமணியும், யாழ்நூலும்!

ஆங்கில மகாகவியாகிய செகசிற்பியாரின் நாடகங்களையும், வடமொழி முடிபுகளையும், சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையினையும் ஆதாரமாகக் கொண்டு ஆய்ந்து வடித்த மதங்க சூளாமணி, மதங்கர்க்கு மட்டு மேயன்றி மானிலத்தார் அனைவர்க்கும் ஓர் வரப்பிரசாதமாகும். இந்நூலின் பெருமையினை உணர்ந்தே மதுரைத்தமிழ்ச் சங்கத்தாரும், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தாரும் பண்டித வகுப்புப் பாட நூல்களுள் இதனையும் ஒன்ருக இணைத்தனர்.

அடிகளார் தமிழுலகிற்களித்த, அளிக்க வேண்டும் என்று இறைவனுற் கற்பிக்கப்பட்ட இறுதி நூல் யாழ் நூலாகும்.

'ஊழிக் காலத் துலகந் தளர்ந்து
ஆழி குளிப்ப அரிமருப் பெடுத்த
தன்மையா மென்னத் தவப்
பெரும் புலவநீ
உலக வழக் கிழந்த உயரிசை
தனக்கோர்
யாப் பென வகுத்த யாழ்நூ
லதனுல்
ஆரணம் போற்றும் நாரணன்
என்கோ.

என்று அடிகளாரைப்

பாராட்டவைத்த அந்நூலின் நுட்பத்தினை அறிந்துணர்ந்தார் மிகச் சிலரே.

அந்நூலிலிருந்து பழந்தமிழர் அமைத்திருந்த இசை நுணுக்கங்களையும், அவ்விசைகட்குத் தமிழர் வழங்கிய தனித்தமிழ்ப் பெயர்களையும், மகரயாழ் சீறியாழ் சகோடயாழ் போன்ற யாழ் விபரங்களையும் அறியும் பொழுது நாம் அடையும் மகிழ்ச்சிக்கோர் எல்லையுண்டோ?

இன்னும் அடிகளார் இயற்றிய 'நடராஜ வடிவம்' போன்ற நூல்களும், இராமக்கிருஷ்ண விஜயம், வேதாந்தகேசரி போன்ற வெளியீடுகளில் எழுதிய கட்டுரைகளும் மறக்க முடியாதவைகளாகும். இவர் இயற்றிய தனிப்பாடல்களோ எண்ணற்றவை.

'தேவபாணி', 'ஈரமகளிர், இமயம் சேர்ந்த காக்கை' ஆறுமுக நாவலர், கங்கையில் விடுத்த ஓலை, என்பன அடிகளாரின் கவிதா நுட்பங்களை நன்கு காட்டுவன வல்லவோ.

இங்ஙனம் அடிகளாரது தமிழ்ப்பெருந் தொண்டினைத் தமிழ்நாடு பாராட்ட முற்படும் என்பதையும், நினைவுச் சின்னங்களை எழுப்பிக் கௌரவிக்கும் என்பதையும்சொல்லவும் வேண்டுமோ?

ஆயினும் அடிகளார் பிறந்த மட்டக்களப்பு நாட்டினர் உலகம் போற்றுகின்ற அவரின் தமிழ்த் தொண்டை மாத்திரம் மனதிற் கொண்டு நினைவுச் சின்னங்களை எழுப்பியிருப்பார்களா? அன்றி அவர்கள் மனதினை உறுத்திய வேறும் காரணங்கள் இருந்திருக்கலாமா? அவ்வாறாயின் அடிகளார் மட்டக்களப்பு நாட்டுக்குச் சிறப்பாக ஆற்றிய சேவை தான் என்ன?

இவ்வினாவிற்கு விடைகாண நாம் அடிகளார் பிறந்த காலத்தினை மனதிற் கொள்ளவேண்டும். மட்டக்களப்பு, சைவமக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது. அக்காலத்திலே சைவமாணவர்கள் தம்சமய நூற்கல்வியினைப் பெறுவதற்குத் தகுந்த வாய்ப்பு இருக்கவில்லை. விவேகானந்தசபையார் நடாத்திய ஒன்றிரண்டு பாடசாலைகளை விட வேறு சைவக் கல்விநிலையங்கள் இருந்ததில்லை. போர்த்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கிலேய

ஆட்சிக்காலங்களில் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்திய பாடசாலைகளே பெருமளவில் நாடெங்கணும் நிறுவப்பட்டன. அப்பாடசாலைகள் ஆற்றிய கல்விப் பணியை நாம் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். எனினும் அவை திரைமறைவிற் செய்த மதமாற்றப் பிணியையிட்டு நாம் மனம் நோகாமல் இருக்கவும் முடியாது.

யாழ்ப்பாண நாட்டிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் அரிய சேவையினுல், பெருகிவந்த மதமாற்றம் என்ற பெருவெள்ளம் அணைபோட்டு நிறுத்தப்பட்டது. மட்டக்களப்பு நாட்டை நினைக்கமுடியாத அளவுக்கு யாழ்ப்பாணத்திலே நிரம்பிய வேலை அவருக்கு இருந்திருக்கவேண்டும்.

எனவே மட்டக்களப்பு நாடு மறுமலர்ச்சிப் பணிபுரிய ஓர் ஒப்பற்ற தலைவனை வேண்டி நின்றது. அக்காலையில் அவதரித்தவர்தான் நமது அடிகளாவர். 1892வது ஆண்டிலே பிறந்த அடிகளார் 1922வது ஆண்டிலேயே துறவறநெறி பூண்டு பணிபுரிய முன்வந்தனர். மயிலாப்பூர் இராமகிருஷ்ணமடத்திலிருந்து துறவறம் மேற்கொண்டு அச்சங்கத்தைச் சேர்ந்த பாடசாலைகள் நிறுவுவதற்காகத் தாயகம் திரும்பினுர். விடாப் பெருமுயற்சியுடன் ஸ்ரீ ராமக்கிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த சைவப்பாடசாலைகளை நிறுவினுர். மக்களும் அளவிலா மகிழ்ச்சியுடன் அடிகளாருக்கு ஆதரவு காட்டினர். புராதனமான சைவக் கிராமங்களிலெல்லாம்சைவப் பாடசாலைகள் எழுந்தன. கல்லடி உப்போடையில் அநாதை மாணவர் கட்கென்று ஒரு இல்லத்தை ஏற்படுத்தி அவர்கட்கெல்லாம் ஆங்கிலக் கல்வியூட்டுவித்தார். இங்ஙனம் அடிகளார் ஆற்றிய பெரும்பணியினுல் மதமாற்றம் என்னும் பிளவைநோய் பெரும்பாலும் தடுத்து நிறுத்தப்பட்டதெனலாம். சைவக்குழந்தைகள் சுதந்திரமாகக்கல்விகற்கக்கூடிய ஓர் சூழ்நிலை ஏற்பட்டது. சைவமதம் மீண்டுந்தலையெடுக்க ஆரம்பித்தது. அடிகளார் செய்த இப்புரட்சியானது மட்டக்களப்புச் சரித்திரத்தில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதை நடுவு நிலைமையுள்ள எவரும் உணராதிருக்கமுடியாது.

இராமக்கிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்

றில், சுவாமி இராமதாசருக்கு நடந்த வரவேற்பின் போது:—

'விண்படர்ந்த திசையனைத்
 தும் சங்கம்நாட்டி
வேதாந்தக் கலை வளர்க்கும்
 ராமகிருஷ்ணர்
தன் கருணையால் விளைந்த
 விபுலாநந்தர்
தவவலியால் நுமை இன்று
 தரிசித்திட்டோம்'

என்ற பாடல் (வரவேற்புப் பத்திரத்தில்) இடம் பெற்றிருந்தது. இந்தப்பாடல், ஒன்றே மட்டக்களப்பு மக்கள் மனதில் அடிகளார் பெற்றிருந்த இடத்தைக் காட்டப் போதுமானதாகும்.

அடிகளாரது இப்பணி சமரசப் பண்புக்கு முரண்பட்டதாகாது; இராமக்கிருஷ்ண சங்கத்தின் கொள்கை, ஒவ்வொரு மதத்தையும் மதிக்க வேண்டுமென்பதே. சைவமாணவர் சைவக்கல்விபெற வழி வகுப்பது அக்கொள்கைக்கு மாறுபட்டதாகாது. அஃதன்றியும் 'மதமாற்றம்' இராமக்கிருஷ்ண பரமஹம்சதேவரின் கொள்கையாகாது, எனவே அடிகளார் பணி நீதியானதும், தேவையானதும், சமரசப்பண்புக்கு உட்பட்டதுமாகும்.

இவ்விதம் அடிகளார் ஆற்றிய சமயப்பணிதான் மட்டக்களப்பு மக்களை மிகவும் கவர்ந்துள்ளது என்று கூறினுல் அது மிகையாகாது. பொதுவாக அமைந்த தமிழ்பணியினையும் சிறப்பாக அமைந்த சைவப் பணியினையும் நினைவூட்டிக்கொண்டே 'விபுலாநந்தமணி மண்டபங்கள்' எல்லாம் மட்டக்களப்பில் தலை நிமிர்ந்து நிற்கின்றன. மற்றவர்களையெல்லாம் முந்திக் கொண்டு மட்டக்களப்பு நாட்டினர் அடிகளாருக்கு மணிமண்டபங்கள் அமைத்த காரணம் நமக்கு ஓரளவு புலனுகின்றது. அடிகளார் அவதரிக்கவில்லையென்றுல் மட்டக்களப்பின் சைவநிலை எவ்வாருகியிருக்கும் என்பதைச் சொல்லவே வேண்டியதில்லை.

எனவே இறந்தும் இறவாத அப்பெரியாரது மணிமண்டபங்கள் என்றென்றும் நிலைத்து ஈடிணையற்று விளங்கவேண்டும் என்று வாழ்த்துவோமாக.

---

# பிரபலம் வாய்ந்த பேனு மன்னர்கள்

# உங்கள் நண்பர்கள்!

- தமிழில் கல்வித்துறையனைத்திலும் தபால் மூலமும், நேரிலும் பயிற்சி கொடுக்கிறோம்.
- கட்டுரை, கதை, நாடகம், கவிதை,
- சொற்பொழிவுகள், விவாதங்கள், வரவேற்பிதழ்கள், பாரட்டுப்பத்திரங்கள்
- **மாணவர்களுக்கான தமிழ் பாடவகைகள்**

எல்லாம் பிரபலமானவர்களைக் கொண்டு தயாரித்துக் கொடுக்கப்படுகிறது.

**குறைந்த கட்டணம்!** **சிறந்த சேவை!!**

இலங்கையிலே எழுத்தாளர்களினுல் நிர்வகிக்கப்படும் கலை, இலக்கிய நிலையம் இது ஒன்றே தான்.

தபால் மூலமோ, நேரிலோ உடன்தொடர்பு கொள்ளவும்.

‘தமிழ் மன்றம்’
சங்கு வேலி
**மானிப்பாய்.**

நிர்வாகிகள்:

1. சி. அரசரத்தினம் (ஆசிரியர்)
2. த. திருநாவுக்கரசன் (ஆசிரியர்) “நாவேந்தன்”

## வீட்டுக்கு அலங்காரப் படங்கள்.

**ஜெஸிமா பட மாளிகை**

சகலவித
**கண்ணாடி**
**படம்**
வேலைகளும்
செய்துகொடுக்கப்படும்

**232, K.K.S. ரோடு,**
***யாழ்ப்பாணம்.***

*சிறந்த முறையில் பிறேம் போடுமிடம்*
**வீட்டுக்குத் தேவையான ஜன்னல் கண்ணாடிகளும்**
**புது டிசைன்களில் பெற்றுக் கொள்ளலாம்.**

# இங்கே வருக!

எங்களிடம் பாடசாலைக்குரிய உபகரணங்கள்
சாப்புச் சாமான்கள், கண்ணாடி, கால்மேச
சப்பாத்து, தொப்பி, குடை, சூட்கேஸ்
பெண்களின் கூந்தல் முடிகள்
முதலியன எப்பொழுதும் பெற்றுக் கொள்ள

## எஸ். சவிரிமுத்து
***73, காங்கேசன்துறை வீதி,***
**யாழ்ப்பாணம்.**

# சரஸ்வதி

**கலை, இலக்கிய இதழ்**

**மாதம் இருமுறை**

திருக்குறள் இலக்கியமா?
என்ற விவாதமும்,
ரகுநாதன் எழுதும்

**"தமிழ் இலக்கியமும்
தத்துவப் போராட்டமும்"**

என்ற ஆராய்ச்சிக் கட்டுரையும்
படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை.

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்கள்
ஒவ்வொரு இதழிலும் இடம்
பெறுகின்றன.

தனிப்பிரதி: 25 ந. பை. ஆண்டுச்சந்தா ரூ.6

**சரஸ்வதி**

**19, லாங்ஸ் கார்டன் வீதி,
சென்னை - 2**

ழ்ப்பாணத்தில்:—

**தமிழ் பண்ணை**

93, கே. கே. எஸ். வீதி, :: யாழ்ப்பாணம்.

Estd. 1926.

நம்பிக்கை

நாணயம்

உத்தரவாதம்

அழகிற் சிறந்த

## நகைகளுக்கு

# எம்மிடம் வாருங்கள்



31 வருட நற்சேவைகளால் மக்களாதரவு
பெற்ற நகை வியாபாரிகள்

## மு. பொன்னம்பலம் அன் சன்ஸ்

**215, கே. கே. எஸ், ரோட்,**

**யாழ்ப்பாணம்.**

*இதுவரை வெளிவந்த "ஏன் படைத்தாய்!" "ஏமாற்றுக்காரி", 'ஓடி வா, உயிர் காக்க!" ஆகியவற்றுடன் தொடர்புடையது. "உங்களுக்கு மட்டும்". காரம்பொனைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியையான, "காவலூர் அம்பிகை"யின் கன்னிப்படைப்பு.*

# உங்களுக்கு மட்டும்

## அருமை அத்தான்,

"சுயநலக்காரி. சதிகாரி, வஞ்சகி ஏமாற்றுக்காரி" இன்னும் என்னென்ன நாமங்கள் எனக்குச் சூட்டவேண்டுமானாலும் சூட்டி அழையுங்கள், அணைத்த கைகளுக்கு அடிக்கவும் உரிமை உண்டுதானே. "ஏன் படைத்தாய் என்னை என்று உன்னைப் படைத்தவனின் கோவிலில் போய்க்கதறியிருக்கலாமே" என எழுதியிருந்தீர்கள். கதறியிருப்பேன் அத்தான் அங்கே, ஆனால் அந்தச் சுவர்களுக்குள்ளேயே அடங்கி மண்ணோடு மண்ணாய் மாண்டிருக்குமே என்வேதனை, ஆசை, ஆவல் அத்தனையும்! நான் விரும்பியது அதுவல்ல. ஏழையாய்ப்பிறந்து பணக்காரியாகவளர்க்கப்பட்டு என்னவரால் கைவிடப்பட்ட இந்த ஏழையின் வேதனைக் குரலை நீங்கள் கேட்கவேண்டும்; என் அத்தான் கேட்கவேண்டும்,

கண்டோம். கட்டுண்டோம், காதல் கொண்டோம். குறுக்கிட்டது நம் காதல் வாழ்க்கையில் என் மாமாவின் பணம், நான் நன்றாக வாழவேண்டுமென்ற அவரது அந்தஸ்து மோகம் அத்தனையும், "கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம்மாறும்" என்று நீங்கள் அடிக்கடி கூறியதைப்போல் நானும் பொறுத்திருந்தேன். ஆனால் காலம் மாறும் என்ற நம்பிக்கை கரைந்து போய்விட்டது. உங்களுக்கென வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த உள்ளத்தின் வேதனையை அப்படியே அப்பட்டமாகக் கூறி விடுகிறேனத்தான், உங்கள் இதயத்திலே நீந்துகின்ற உணர்ச்சியலைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் எழுத்துக்களில் பொறிக்கும் எழுத்தாளன் நீங்கள் இவற்றையெல்லாம் அம்பலப்படுத்தி விடுவீர்களோ என்னவோ.

நீங்கள் என்னை இடறித்தள்ளி விட்டுச் சென்ற மூன்றாம் நாள் உங்களைத் தேடி நீங்களிருந்தவீடு சென்றேன். பூட்டப்பட்டிருந்தது. கதவு. காரியாலயம் சென்றேன். நீங்கள், விலகிவிட்டதாகக் கூறினார்கள். உள்ளம் இருண்டது. கண்கள் இருண்டன. உலகமே சுழன்றது.

இருண்ட என்னிதயத்தில் இன்

னுமே ஒளி ஏற்படவில்லை. உங்களின் முகம் காணத்துடிக்கின்றேன். "கண்ணே முத்தேகற்பகமே கன்னித்தமிழே என்னுயிரே" என்றெல்லாம் அழைப்பீர்களே. உங்களின் கடிதங்களில் தொடங்கும்போது "என்னவளுக்கு" என்று குறிப்பிடுவீர்களேயத்தான் அந்த ஒரே ஒரு உரிமைச் சொல்தான் என் உள்ளத்தோடு இயைந்து கலந்து இரத்தத்தோடு இரத்தமாய் ஓடுகின்றது. என் உயிரையும் உள்ளத்தையும் உங்கட்கே அர்ப்பணித்து விட்டேன் என்ற உண்மையை உணராதிருந்தால் அப்படி நீங்கள் எழுதியிருக்க முடியாது. மாமாவினுல் உங்கள் சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்பட்டு விட்டது என்ற ஆத்திரத்தில் உங்களை மறந்து உங்களுக்குள்ளேயே ஐக்கியமாகிவிட்ட உங்களவளை மறந்து நம்மைப்பிரியாது பிணித்து வைத்த இந்தத் தெய்வீக அன்பை மறந்து சென்றுவிட்டீர்கள். அதுவும் திரும்புவதில்லை என்ற தீர்மானத்துடன்! எத்தனைமைல்கள் எம்மைப் பிரித்தாலும் என் அத்தானின் உள்ளம் என்னிதயத் துடிப்புக்கு எதிரொலிக்கும் என்ற ஒரு நம்பிக்கை இருந்தது; இருக்கிறது. எடுத்த எடுப்பிலேயே இரண்டு சொல் சேர்ந்தாற்போல் எழுதத்தெரியாதவள் நான். ஆனுலும் உங்கள் சகவாசத்தினுலேயோ என்னவோ என் இதயக் குமுறலின் வேகத்தினுல் உந்தப்பட்ட நான் ஏதோ எனக்குத் தெரிந்த தமிழில் எழுதினேன். உங்களை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காக வல்ல, என்சிந்தையைக் கலக்கிஎன்னை அனுவணுவாக அரித்துக்கொண்டிருக்கும் என்னுள்ளத்துணர்ச்சிகளையெல்லாம் அப்படியே கக்கிவிட்டு என்னை வேண்டாத இவ்வுலகைவிட்டு விலகி விடவேண்டும் அல்லது எனக்குரிய உள்ளத்திடம் நான் சென்றடையவேண்டும் என்பதற்காக. என் எண்ணம் வீண் போகவில்லை!

மயங்கிய நிலையில் வீழ்ந்த என்னை யாரோ என் மாமாவின் முன்னிலையில் கொண்டுவந்து சேர்த்திருக்க வேண்டும். என் கண்ணிலேயே தென்படாத வாறு திரிந்தார் மாமா. என்னிடம் அதிகம் பேசுவதில்லை. நானே மந்தம் பிடித்த நிலையிலிருந்தேன். உங்களைத் தேடவேண்டும், காணவேண்டும்,பேசவேண்டுமென்றே, அடுத்து என்ன செய்யவேண்டும் என்ற சிந்தனையோ தோன்றவில்லை. பேய்பிசாசில் எனக்கு அதிக நம்பிக்கையில்லை. ஆனுலும் 'பேயறைந்தாற் போல்' என்று பேசிக்கொள்வதைக் கேட்டிருக்கிறேன், அந்தநிலையில் என்னைப் பார்த்தவர்களும் அப்படித்தான் என்னை வர்ணித்திருப்பார்கள். உணர்ச்சி முழுவதையுமே நான் இழந்திருந்தேன். வெளிச்சத்தில் நடந்து சென்ற ஒருவர் திடீரென ஓர் இருட்டறையுள் புகுந்தால், அல்லது ஒளி வீசிக்கொண்டிருந்த விளக்கு அணைந்து விட்டால், கண்ணே கெட்டு விட்டதோ எனும்படி ஒரே இருள் மயமாக இருக்கும். ஆனல் சில நிமிடங்களில் சிறிது வெளிச்சம் ஏற்படுவதாக ஒரு உணர்ச்சிதோன்றுகிறதல்லவா. நாட்கள் செல்லச் செல்ல என் உள்ளத்திலும் மீண்டும் சிந்தனைக்கீறல்கள் தோன்றின.

விறைத்துப்போய் வரண்டிருந்த என் னிதயத்திலே உங்களின் தண்முகம் தோன்றித் தயங்க வைத்தது என்னை. மணிக்கணக்காக நீங்கள் இருந்து கதைகதையாய் எழுதிக்குவித்த சாய்வு நாற்காலி, பாரதி, பாரதிதாசன், கம்பன் வள்ளுவர் ஆகியோரின் அமிழ்தினு மினிய பாடல்களை உரக்கப்படித்து என்னையும் இன்பவெள்ளத்தில், செந் தமிழின் தேன்சுனையில் மூழ்கச் செய் தீர்களே மகிழமரநிழலில். அந்த மகிழ மரம்! என்கண்ணில் தோன்றும் அத் தனை பொருட்களும் நம் காதற்கதை சொல்லும் ஓவியங்களாக நின்று என் னைக்கலங்க வைக்கின்றன. என்னறை யில் கிடக்கின்ற இந்தககட்டிலில் நான் படுத்திருந்தவேளையிலே ஒருநாள் மா மா இல்லாத சமயம் தெரிந்து திடீ ரென நுழைந்த நீங்கள் "என் கண் ணிற் பாவையன்றோ கண்ணம்மா என்று பாடி, கண்ணம்மாவைச் சித்திரா எனமாற்றிக் கொள்வோமா" எனக்கேட்டீர்களே. கட்டிலும் இதோ இருககிறது. கவிதையும் இதோ ஒலித் துக்கொண்டிருக்கிறது என்னிதயத் திலே. ஆனால் நீங்கள் ......... எதை யெதையோஎல்லாம் எண்ணியெண்ணி ஏங்குகிறது என்மனம். எதைத்தானத் தான் எழுதுவது? காலைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தவளை உத றித்தள்ளி விட்டுத்தலை மூழ்கிவிட்டேன் என்று எண்ணிச்சென்ற என் அத்தா னின் எண்ணத்தினால் நிறைந்து தவி யாய்த்தவிக்கிறது என் உள்ளம்.

மாமாவிற்கு நான் மனம் திரும்பி விட்டேன் என்ற எண்ணம் ஏற்பட்டி ருக்கமுடியாது. கேட்டுப்பார்க்கலாம் என்ற நப்பாசையினாற் போலும் தன் மையாகவும் வன்மையாகவும் புத்தி மதி புகட்டுவதாக எண்ணி ஏதே தோ கூறினார், "அன்று உன்னைக் கதறும்படி விட்டுச் சென்றவன் இனி மேல் வரமாட்டான்" என்று காரணங் காட்டி உங்களை மறந்து விடும்படி வற்புறுத்தினார். "உன்னை மனதாரக் காதலிக்கிறான் சோமு. பணம் உண்டு. டாக்டர் பட்டமும் பெற்று விட்டான். சித்திரா! நீ பிறந்த இடம்தான் பிச்சை வீடு. புகுமிடமாவது பெரிய இடமாக இருக்க வேண்டாமா? பெருமைப்படு வதை விடுத்து அழுது புலம்புகிறாயே! நீ சீரும் சிறப்புமாக வாழவேண்டு மென்பது தான் என் ஆசை" என் றெல்லாம் ஆசை வார்த்தைகள் கூறி னார். நான் மசியவில்லை. தன் முயற்சி வீணானது கண்ட மாமா சீறினார். "எங் கோ கிடந்த உன்னை எடுத்து வந்து சீராட்டினேன். என்செல்வத்தைத் தண் ணீராகக் கரைத்தேன் உன்னைக் கற்க வைப்பதற்காக, எல்லாம் என்மானத் தை நீ கப்பலேற்ற வேண்டும் என் பதற்காகவா?" என்று கத்தினார். நான் எதுவும் பேசவில்லை. இனி எவரையுமே என் மனத்தால் நினைத் துக்கூடப் பார்க்கா முடியாது என்ற பதிலை மீண்டும் மீண்டும் சொல்லி அலுத்துவிட்டேன்.

புலியாக இருந்த மாமா ஒருநாள் திடீரெனப் பசுவானார். கடுகடுத்த முகத்துடன் திரிந்தவர் புன்னகை யைத்தானாக வரவழைத்துத் தன்மை யாகப் பேசமுயன்று அதில் ஓரளவு

வெற்றியும் கண்டார். தேனொழுகப் பேசினார். காரணம் மாலையில் தெரிந்தது. அன்று மாலை உங்கள் கலா சாலை நண்பர் சோமு வந்தார். எங்கள் வீட்டுக்கு. இராஜோபசாரங்கள் நடந்தன. அவருடன் பேசிக்கொண்டிருந்த மாமா திடீரென என்னை அழைத்து "உனக்கு இவன் அத்தான் முறை வேண்டுமல்லவா. ஏனம்மா பேசாமல் ஒழிந்து கொண்டாய்? இருவரும் பேசிக் கொண்டிருங்கள். நான் ஒரு அவசரகால அலுவலாக அடுத்த தெருவிற்குப் போய் விட்டுவந்து விடுகிறேன்" எனக்கூறி விட்டுப் பதிலுக்குக் காத்திராமல் புறப்பட்டுவிட்டார். உள்ள உறவை புதுப்பித்துக் கூறியதன் அர்த்தம் உடனேயே எனக்கு புரிந்துவிட்டது. மாமாவின் வீட்டில் இனிமேல் ஒருகணமும் தங்கியிருக்கக் கூடாது என்ற எண்ணம் வலுப்பெற்றது. செல்லுமிடம் சிந்திக்காது வீட்டை விட்டுப் புறப்பட்டேன். என் செய்கை டாக்டர் சோமுவின் இதயத்தில் எந்த வித உணர்ச்சியைத் தூண்டி விட்டதோ நானறியேன். "சித்திரா, சித்திரா" என்று உரக்கக் கூப்பிட்டார், அந்தக்குரலில் தோன்றிய வேதனையும் ஒருவிதபாச உணர்ச்சியும் என் கால்களைத்தடுத்து நிறுத்தின. எனக்கருகில் வந்தவர் என் கண்ணில் நீர்வடிதலைக் கண்டு திடுக்கிட்டு "ஏனம்மா அழுகிறாய்? என்ன நடந்தது? எங்கே புறப்பட்டுச் செல்கிறாய்?" எனக்கேட்டார். "அண்ணா! நீங்கள் பணக்காரர், டாக்டர். நானோ ஏழை மாத்திரமல்ல அநாதையும் கூட; இக்காரணத்துக்காக எங்கள் காதலை நீங்கள் துண்டிக்கலாமா? என்மேல் உங்களுக்கு அன்போ இரக்கமோ அதுபோன்ற எந்தவித மனக்கசிவோ ஏற்பட்டிருந்தால் என்னை எனக்குரியவரிடம்—உங்கள் நண்பரிடம் சேர்ப்பியுங்கள் என்னை நீங்கள்விரும்புவதேபாவமண்ணா". எனக் கூறிய நான் விம்மியழத்தொடங்கிவிட்டேன்.

"சித்திரா! உன்னை என் உடைமையாக்கிக்கொள்ள நான் விழைந்தது உண்மைதான். ஆனால் உன்மனம் என்னை நாடவில்லை, சாமியும் நீயும் கருத்தொருமித்துப் பழகுகிறீர்கள் என்று அறிந்த அன்றிலிருந்தேஉன்னை என்தங்கை ஆக்கிக் கொண்டேன். உன்வாழ்வை மலர வைப்பதுதரன் என் ஒரே இலட்சியம், நோக்கம், விருப்பம் எல்லாம், இதை உன்னிடம் கூறுவதற்காகத்தான் உன்மாமாவின் அழைப்பை ஏற்று இன்று நானிங்கு வந்தேன். அவரோ நீயோ நினைப்பது போல் பெண்பார்க்க நான் வரவில்லை. என் நண்பனை நான் நன்ருக அறிவேன். உணர்ச்சி வேகத்தில் எதையும் தீரஆலோசிக்காது செய்து விடுபவன். ஆனால் பின்பு இடித்துரைக்கும் போது மனமாரவரவேற்று அறிவுரைகளுக்குச்செவிசாய்த்துத் திருந்தி நடப்பவன் மற்றவர்களின் உணர்ச்சிக்கு மதிப்புக்கொடுப்பவன், உன்னைத் தவிக்கவிட்டுச் செல்ல அவனுள்ளம் ஒருப்படாது. நான் எப்படியும் அவனைத் தேடிக்கண்டு பிடித்துவிடுவேன் அதற்கு ஒரேயொரு வழி அவனது உயிர்நிலை-எழுத்து." என்ருர்-

மாமா வந்து சேர்ந்தார். டாக்டர் புறப்பட்டார். அவரை வழியனுப்பி விட்டுத் திரும்பினுர் மாமா. டாக்டர் சோமுவும் மனிதன்தானே. ஏமாற்றம் இரக்கம் வேதனை எல்லாம் அவர் முகத்தை விகாரப்படுத்தியிருக்கும். மாமா விரைவில் விடயத்தைப் புரிந்து கொண்டிரிப்பார். என்னைக்கண்டதும் சீறுவார் உறுமுவார், திட்டுவார் என்றெல்லாம் எதிர்பார்த்தேன். அவரைக் கண்டதும் அவர்காலைக் கட்டிப்பிடித்து "கேவலம் பணமும் பட்டமும் அந்தஸ்தும் அதற்கேற்ற மினுக்கும் உள்ளவர்களை மட்டுமே மதிக்கின்ற இந்தச் சமுதாயத்தின் கண்களுக்குத் தான் உங்கள் பணம்பண்டம் எல்லாம் காட்சிதரும். என்கண்களுக்கு அவற்றைப் பார்க்கும் சக்தியில்லை மாமா. உண்மையன்பு, ஏழைகளிடத்திலே பிறந்த இரக்கம், மற்றவர் மகிழ்ச்சி யடைவதைக் கண்டு தான் மகிழும் பண்பு அத்தனையும் நிறைந்த அந்த உள்ளத்தின் அன்பொளி என் கருத்திலே புகுந்து என்கண்ணை நிறைத்து விட்டதுமாமா. அந்த ஒளியின் பிரகாசத்தினுல் என்கண்கள் குருடாகி விட்டன பணம், பட்டம், மாளிகை மஞ்சம் அத்தனையையும் பார்க்கமுடியாத அளவிற்கு நான் குருடியாகி விட்டேன். என்னைப் பரதேசியாகவே பரதேசியுடனேயே வாழ விடுங்கள். உங்கள் பணம் வேண்டாம், பத்தடுக்குமாளிகை வேண்டாம். பாலும் பழமும் வேண்டாம், பகட்டான வாழ்வு வேண்டாம். நீங்கள் "சீரும் சிறப்பும்" என்பீர்களே அந்தச் சித்திரவதை வேண்டாம். எனக்குரிய உள்ளத்திடம் நான் சென்றடைய வழி வகுங்கள். சங்கமமாகி விட்ட இரு உள்ளங்களைச் சங்கடப்படுத்தாதீர்கள். வாழ விடுங்கள் மாமா என்னை வாட்டாதீர்கள்" என்றெல்லாம் கதறியழ வேண்டும் போலிருந்தது, ஆனுல் உணர்ச்சிப் பெருக்கினூற்போலும் ஒரு சொற்கூட வாயிலிருந்து வெளிவர மறுத்துவிட்டது.

மாமாவின் கால்களில் விழுந்து கதறினேன் எதுவும் கூறுமல். யாருமற்ற இந்த அநாதையை ஆதரித்த என்மாமாவை வெடிக்கச் செய்துவிடும் போலிருந்தது. "எழுந்திரு சித்திரா" என்ற மாமாவின்குரல் நடுங்கியது. பார்த்தேன் அவர் முகத்தை அவர் அவர் கண்களில் நீர்த்துளிகள். கண்ணீரைத் துடைத்தபடியே என்னை அணைத்துக் கொண்டார் மாமா. 'சித்திரா, உன் உள்ளத்தை அதிகம் புண்படுத்தி விட்டேன். உனக்கில்லாத இன்பமா எனக்கு? ஏதோ நீ சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் என்ற ஒரு அர்த்தமற்ற ஆசையினுல் உன்வாழ்வையேபாழாக்க இருந்தேன். சோமுதான் என்கண்களைத் திறந்து விட்டான். எப்படியும் சாமிநாதனைக் கண்டு பிடித்து உங்களிருவரையும் சேர்த்து வைத்தபின்தான் என்மனது நிம்மதி அடையும். உண்மையன்பை உணரும் உள்ளமில்லாத நான் தான் பரதேசி." என்று கூறினுர். என்காதுகளை என்னுல் நம்பவே முடியவில்லை. என் எண்ணத்தின் எதிரொலியோ எனத்தோன்றியது. என்மேலுள்ள அன்பா, இரக்கமா, அவரின் முயற்சி தோல்வி யடைந்தமையின் விளைவா, டாக்டர் சோமுவின் போ

ரனேயா, நம்பிரேமையின் சந்தியா அல்லது எல்லாம் வல்ல இறைவனின் கருணைதானே, எது இப்படி மாமாவின் மனதை மாற்றியதோ நானறியேன். அன்றே நாம் சேர்ந்து விட்டோம். என்ற ஒரு எண்ணம் என்னுள்ளத்தில் அரும்பியது. உங்கள் மேல் ஆணையாகக் கூறுகிறேனத்தான். நீங்கள் எங்கோ ஒரு மூலையில் எனக்காக வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். வேறெவர்க்கும் நான் சொந்தமாக முடியாது என்ற ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையினுற்றான் நான் உயிர்வாழ்கின்றேன். இன்னும் அந்த நம்பிக்கையை ஆண்டவன் கூட அசைக்கமுடியாது.

நான் தமிழிச்சி. அதுவும் என்னை ஒரு எழுத்தாளனுக்கு அர்ப்பனித்து விட்டவள். இனிமேல் என்னுல் அதிக நாட்களுக்கு வாழமுடியாது தனித்திருந்து. உங்கள் உடமையைப் பாதுகாக்க முடியாது. "நெஞ்சிலுறுதி இல்லையா?" எனக்கேட்கத் தோன்றுகிறதா? அது வேண்டிய மட்டுமுண்டு அத்தான். ஆனுல் தானகவே உருகிக்கொண்டு போகும் என்னுவியைத் தடுத்து நின்று காப்பாற்ற நீங்கள் தான் ஓடோடி வரவேண்டும்.

கேவலம், பணமோ "சுயமரியாதை"யோ நம்மைப்பிரித்து விட வேண்டாம். உங்களுடையவளை வந்து ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் கோபமோ வெறுப்போ தணிந்த பாடில்லையானுல் யாரைத்தான் நோவது! என் உள்ளத்தை, அது எவற்குரியதோ அவரிடமே திறந்து காட்டி விட்டேன். "அத்தான்" என அழைத்து என்னுள்ளத்தைப் பிழிந்து கடித வடிவமாக்கி விட்டேன். என்ற எண்ணமே எனக்கு மனச்சாந்தியளிக்கட்டும்.

———


# ராக்ஸீ பிடியுங்கள்!

## மைலுக்கு 60 சதம்

- குறைந்த செலவில் வசதியான பிரயாணம்.
- பணிவு, உற்சாகம், நேர்மையுள்ள சாரதிகள்.
- நிதானமான சலார்—நீங்கள் கொடுப்பது மீட்டர் காட்டுவதையே.
- வாக்குவாதம் வேண்டாம்—மீட்டரைக் கவனியுங்கள்.
- பிரயாணிகள் 'இன்சூர்' செய்யப்பட்டுள்ளனர்.
- முக்கியமான இடங்களில் பிடிக்கலாம்.

டெப்போன் இலக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

## யாழ்ரதம் லிமிடெட்,

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

தொடர்கதை:-

# இதயவானிலே

— உதயணன் —

## நடந்த கதை

சந்திரனும் மீனுவும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சந்தித்துத் தமது பாலிய நட்பைக் காதலாக மலரச் செய்து காதற் கீதம் பாடுகின்றனர். அவர்களுக்கு ஒத்தாசையாக இருக்கின்றாள் சந்திரனின் ஒன்று விட்ட தங்கை வாணி.

காதற் பாதையில் தோன்றிய பல எதிர்ப்புகளை எதிர்த்துப் போராடித் தமது காதல் கொடியை உயரத் தூக்க இந்த இளம் உள்ளங்கள் துடித்த வேளையில் அந்த உறவுக் கயிற்றைத் துண்டித்துவிடுகிறார் மீனுவின் தந்தை.

நாவலூர் வேலவன் கல்லூரியில் சந்திரனுக்கும் சுகுணவுக்கும் தொடர்பு உண்டாகிறது. அந்தத் தொடர்பைக் காதல் என்று தப்புக்கணக்குப் போட்ட சுகுண ஏமாற்றமடைந்து, சந்திரன் தன்னை பலாத்காரம் செய்ததாகப் பறைசாற்றி விடுகிறாள். சந்திரன் பொது மக்கள் முன்பு தலை குனிய வேண்டிய நிலை. அடுத்தது...?

## 6. அங்கும் இங்கும்

பயிற்சிக் கலாசாலையை விட்டு வெளியேறிய சந்திரனுக்குச் சீக்கிரமே ஒரு தொழில் தேடிக்கொடுத்து விட்டார். அவன் ஓரளவு மீனுவை மறந்து நினைவை வேறெங்காவது செலுத்துவான் என்று கனவுகண்டார் நடேசபிள்ளை. அவருடைய எண்ணத்துக்கு சாதகமாக, அந்தக் கிராமத்திலேயே ஒரு பாடசாலையில் ஓர் ஆசிரியருக்கு வேலையிருப்பதாக அறிந்து ஓடினார்.

அந்தப் பாடசாலைக்குச் சைவப்பாடசாலைஎன்று பெயர் வைத்தான். நோக்கம் கடைசி

வரை அந்தரங்கமாக இருக்க வேண்டும் என்பது, அப்பாட சாலை ஆதிகர்த்தாவின் ஆத்ம ஆசையோஎன்னவோ, 'சைவம்' பெயர்ப் பலகையில் மட்டும் பரிதாபம்..கத் தொங்கிக்கொண் டிருந்தது.

நடேசபிள்ளை தான் கொலை சென்ற இராசவள்ளிக் கிழங் கைத் தட்சணையாக வைத்து விட்டு, பாடசாலை மனேஜரிடம் தன் குறையைக் கூறிச் சாஷ் டாங்கமாக விழுந்து கும்பிடாத குறையாக நின்ருர்.

சந்திரனை ஆசிரியனுக நியமிப் பதில் எனக்கொன்றும் ஆட் சேபமில்லை. ஆனல் பாடசாலை நிர்வாகத்தில் பங்கு கொண்டு ள்ள வேறு சிலரையும் திருப் திப்படுத்த வேண்டியிருக்கிறது. அதோடு பாடசாலைக்குப் புதிய கட்டடம் வேறு போட ஆரம் பித்து விட்டோம். என்று நிறுத் தினர். பாடசாலை 'மனேஜர்'

அதற்கு என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள் என்று ஆவலாய்க்கேட்டார். நடேசபிள்ளை.

"ஒன்றும்பிரமாதமாக இல்லை. நீர் கட்டட நிதிக்கு ஒரு ஐந் நூறு ரூபா கொடுக்கவேண்டி வரும். மற்றைய நிர்வாகஸ்தர் களுக்கு ஒவ்வொரு ஐந்நூறு ரூபா. மொத்தமாக ஒரு இரண் டாயிரம் ரூபாவைத் தள்ளிவிட் டீர் என்ருல் உத்தியோகம்உமது மகனுக்குத்தான்'' என்ருர்.

அடுத்த நிமிஷம்—

நடேசபிள்ளை குமுறிக்கொ ண்டு தெருவழியே நடந்து கொண்டிருந்தார்.

தனிப்பட்ட ஒருவன், அல் லது கூட்டாகச் சேர்ந்த ஒரு சிலர் கூடி ஒரு ஸ்தாபனத்தை நிறுவினல்—அங்கு வேலை கேட் டுச் சென்ருல், தலைவிதியே என்று கொஞ்சம் பணத்தை வீசி அழுதுவிடலாம். ஏனென் ருல் அவர்களுடைய நோக்கமே பணம் பண்ணும் வழியைக் கண்பிடிப்பதுதான். ஆனல் நாளைய சந்ததிக்கு எண்ணும் எழுத்தும் கற்பிக்கவென்று நிறு வப்பட்ட அறிவுக் கூடங்களின் பெயரால் இல்லாதவனை வதைத் தெடுத்து உள்ளவன் கொழுத்து வாழ்கிருன். இதையிட்டு நாம் அழுவதா அல்லது சிரிப் பதா? பஞ்சகாலத்திலே உண வுப் பொருட்களைப் பதுக்கிவைத்

துப் பஞ்சைகளின் உடம்பைப் பிழிந்து பணம்கறக்கும்கறுப்புச் சந்தைக்காரனை விட, ரகசியமான முறையில் யந்திரங்களை வைத்துக் கள்ள நோட்டடித்துப் பொதுமக்களையும் அரசாங்கத்தையும் ஏமாற்றும் கயவர்களை விட, கடும் இருளிலே கன்னியரை வழிமறித்துக் கதறக் கதற கற்பைக் களவாடும் கொடிய காமாந்த காரரைவிட, கொள்ளைக்காரனைக், கொலைகாரனைவிட இவர்கள் எந்த விதத்தில் சிறந்தவர்கள்? எந்த ரகத்தில் உயர்ந்தவர்கள்? பாடசாலையில் போய்ப்பார்த்தால் பாரதிக்கு இறந்த தினமும் பிறந்த தினமும் கொண்டாடப்படும். காந்திக்கு இறந்த தினமும் பிறந்ததினமும் கொண்டாடப்படும். இன்னும் எத்தனையோ பேருக்குத் திருவிழா, பெருவிழா, தேர், தீர்த்தங் கூடக் கொண்டாடப்படும். இந்தப் பகுத்தறிவு படைத்த பிண்டங்களின் வாழ்க்கையிற் கொஞ்சம் உள்ளே நுழைந்து பார்த்தால், அத்தனையும் கொடுமை, கொடுமை. ஐயோ, யாழ்ப்பாணமே! உனது கல்வி என்ற கண்களைப் பணம் என்ற கட்டாரியால் குத்திக் கொண்டு எத்தனை காலமாகிவிட்டது?

உணர்விழந்து வீடு திரும்பிய நடேசபிள்ளைக்கு நாராயணன் ஒரு நல்ல செய்தியைத் தந்தார். நாவலூர் வேலவன் கல்லூரியில் சந்திரனுக்கு ஒரு உத்தியோகத்தை ஒழுங்கு செய்து விட்டாராம். நடேசபிள்ளை துள்ளிக் குதிக்கவில்லை; வயதாகி விட்டதல்லவா? ஒரு புன்னகை மூலம் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

சந்திரன் வீட்டில் பயணத்துக்கு வேண்டிய ஆயத்தங்கள் தடல்புடலாக நடந்து கொண்டிருந்தன.

சந்திரன் மட்டும் பித்துப்பிடித்தவன் போல ஏதோ ஒரு நாவலைப் புரட்டிக்கொண்டிருந்தான். கைகள் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்த போதிலும், கண்கள் எழுத்துக்களை மேய்ந்து கொண்டிருந்த போதிலும், உள்ளம் எங்கோ தாவிப் பறந்து கொண்டிருந்தது.

"என்னண்ணு, பலமான யோசனை!" என்று அங்கு தோன்றினள் வாணி.

"வாணி! என்முன் சந்திரன். அவனுடைய குரல் கம்மியது.

"இன்றைக்கு நான் நாவலூருக்குப் போகிறேனல்லவா?"

"தெரிந்தது தானே! ஓகோ, அதற்குள்ளாக மீனுவை ஒரு முறை பார்த்துவிட வேண்டுமென்கிறாயா?"

"ஆமாம் வாணி, நான் நாவலூருக்குப் போய் விட்டால் எங்கள் உறவுக்கு ஒரு நல்ல முடிவு காணும்வரை திரும்புவதில்லை என்று தீர்மானித்து விட்டேன்."

"ஏனண்ணா திடிரென்று இந்தத் தீர்மானம்?"

"அடிக்கடி வந்து என் இதயத்தைப் புண்ணாக்கிக் கொண்டு நான் திரும்பிப்போக விரும்பவில்லை. சுவரில் ஒரு பகுதி வெட்டி விட்டால், அதைச் சுண்ணும் சிமெந்தைக்கொண்டு மெழுகிவிட முடியும். ஆடையிலே ஒரு கிழிசல் ஏற்பட்டால் ஊசியால் அதைத் தைத்து விட முடியும். உள்ளம் வெடித்து விட்டால்—கிழிந்து விட்டால் — உடைந்து நெருப்பாகிச் சிதைந்து போய் விட்டால் — அதைத் தைக்கவோ ஒட்டுப்போடவோ முடியாது.

"சரி இப்போ என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?"

"நான் போவதற்கு முன் மீனுவை ஒரு முறை சந்தித்து ஒரு வார்த்தை பேசி......."

"இதற்காகவா கவலைப்படுகிறாய்? நான் ஏனும் இருக்கிறேன்! நீ மட்டும் தானே ஸ்ரேசனுக்குப் போவாய்?

"ஆமாம்"

"மீனுவை எப்படியும் அங்கு அழைத்து வந்து விடுகிறேன். ரயில் ஏறும் பொழுதே அவளிடம் சொல்லிக் கொண்டு போகலாம்" என்று ராணி சிரித்தாள்.

சந்திரன் நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டான்.

—0-0-0—

ரயில் புறப்பட இன்னும் ஐந்து நிமிடங்கள் உண்டு. வாணியும் வரவில்லை. மீனுவும் வரவில்லை. சந்திரன் கைகளைப் பின்னுக்குக் கட்டிக்கொண்டு, இருப்புக் கொள்ளாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.

இன்னும் மூன்று நிமிடங்கள் உண்டு. வாணியும் வரவில்லை. சந்திரன் இயன்ற தூரம் வரை பார்வையைச் செலுத்தி

விட்டு இடது உள்ளங்கையில் வலது கையைக்குவித்துக் குத்திக் கொண்டான்.

ரயில் வந்து நின்றது, வாணி மீனா இருவரையும் காணவே காணோம். சந்திரன் பெட்டிபடுக்கைகளை எடுத்து ரயிலுக்குள் எறிந்து விட்டு ஏறி உட்கார்ந்து கொண்டான்.

ரயில் கூ.....கூ... என்று அவலக் குரல் எழுப்பி அசைய ஆரம்பித்தது. வாணி இளைத்துக் களைத்து ஓடி வந்தாள். அவளுடைய முகத்தில் மகிழ்ச்சிக் குறி இல்லை.

"வாணி மீனா எங்கே?"

"அவள் வரவில்லை"

"ஏன்"

"நீ இந்த ஊரைவிட்டுப்போகும் வரை அவளை வெளியே அனுப்ப முடியாது என்று சொல்லி விட்டார். அவளுடைய அப்பா"

ரயில் ஓடிக்கொண்டிருந்தது

X X X

நாவலூருக்குவந்துவிட்டான் சந்திரன். அங்கு சுகுணா என்ற சுந்தரியோடு நெருங்கிப்பழகப் போய், அந்தத் தொடர்பு எந்த எல்லையில் கொண்டுபோய் விட்டது. என்ற சங்கதிதான் நமக்குத் தெரியுமே!

பாடசாலை மணியடித்தது. மாணவர் பரிவாரம் "ஒருநாள் தொலைந்தது" என்று குதித்தோடி மறைந்தது.

"நாளைக்கு இந்த ஊரே உங்களைப் பார்த்துச் சிரிக்கப்போகிறது. அப்பொழுது நினைப்பீர்கள்" இந்தச்சுகுணாவின்கடைசி வார்த்தையை மனனம் செய்தபடி வெளியேறினான் சந்திரன்.

"டிங்கான்! செக்கு வேலை முடிந்து வீட்டுக்குக் கிளம்பி விட்டிராக்கும்" என்ற குரல் கேட்டுச் சந்திரன் திரும்பிப் பார்த்தான், சுகுணாவின் தகப்பனார் தமது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். அவர் யாரையும் பெயர் சொல்லி அழைப்பது கிடையாது. அப்படிச் செய்வது மரியாதைக் குறைவு என்று கருதினாரோ என்னவோ! எல்லோரையும் டிங்கான் என்றே அழைப்பார், அதனால் மற்றவர்களும் அவரை 'டிங்கான்' என்று அழைக்கத் தலைப்பட்டனர்.

என்னய்யா நாங்களெல்லாம் பள்ளிக்கூடத்துக்குச் செக்கா

ட்டவா போகிறோம்!" என்று சந்திரன் சிரிக்க முயன்றான்.

"கேட்டீரே கேள்வி பார்லி மேந்திலே கேட்டமாதிரி! ஆமா, சலூன்காரனுக்கும் லாண்டிரிக் காரனுக்கும் உமக்கும் என்னங்காணும் வித்தியாசம்?"

"அவன் சுதந்திரமாக வேலை பார்க்கிறான். நான் அடிமை வேலைபார்க்கிறேன் அவ்வளவு தான்"

"என்ன ஓய் டிங்கான்! உள்ளே வாருங்காணும் கொஞ்சம் உட்கார்ந்து பேசலாம்" என்று அழைத்தார் டிங்கான்.

"நானும் உங்களை இன்று பார்க்க வேண்டுமென்றுதான் இருந்தேன். இவ்வளவு அன்பாகப் பழகிவிட்டு............" என்று இழுத்தபடி அமர்ந்தான் சந்திரன்.

"அப்படியா..சொல்லுங்கள்" என்று சந்திரன் சொல்லப் போவதைக் கேட்க ஆயத்தம் செய்தார் டிங்கான்.

சந்திரன் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று அறியாது திணறினான்....அவனுக்கு அவரிடம் அளவற்ற மதிப்பு உண்டு. காரணம் அவரும் அப்படி நடந்து கொண்டதே.

பாடசாலையிலிருந்து வந்திருந்த சுகுண ஆடைகளை மாற்றிக் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு தந்தையாருக்குப் பக்கத்தில்வந்தமர்ந்துஅன்றைய தினசரியைப் புரட்டினன், சந்திரனைக் காணாதவள் போல. இந்தச் சமயத்தில் விஷயத்தைக் கூறிவிடுவது நல்லது என்று சந்திரன் ஆரம்பித்தான்.

"நீங்கள் இத்தனை நாளாக, பிதாவுக்குப் பிதாவாக, நண்பருக்கு நண்பராக பலநிலைகளில் இருந்து அன்பைக் கொட்டிப் பழகினீர்கள். நான்கூட அப்படித்தான் உங்களிடமும் சுகுணவிடமும் பிரியமாக இருந்தேன்......". சந்திரனின் குரல் கரகரத்தது. "ஆனல் இன்று திடீரென்று ஒரு விஷயத்தைச் சொல்லப் போகிறேன். ஒருவேளை நீங்கள்வருத்தப்படலாம். வேறு வழியில்லை" என்று நிறுத்தினன்.

"பூர்வபீடிகைபோதும், சொல்லுங்கள்" என்றார் 'டிங்கான்' மேலும் ஆவல்பட்டவராக.

"சொல்லிவிடுகிறேன். ஆனால் எக்காரணம் கொண்டும் 'ஏன்' என்று மட்டும் திருப்பிக்கேளா தீர்கள். என் வேலையை ராஜி னுமாச் செய்துவிட்டேன். இன் றிரவே யாழ்ப்பாணம் போகி றேன்".

திடுக்கிட்ட 'டிங்கான்' நாற் காலியில் சாய்ந்து உட்கார்ந் தார். இப்படியான ஒரு திடீர் முடிவைச் சந்திரனிடம் அவர் எதிர்பார்க்கவில்லை.

மௌனம்!

சுகுணாவுக்குக் கூட இம் முடிவு எதிர்பாராத முடிவாகத் தான் பட்டது. எல்லாம் தன் னால் வந்தவினைதானே என்று பரிதாபத்தோடு சந்திரனைப் பா ர்த்தாள். அவளுடைய பார்வை யிற் கர்வம் கரைந்து பச்சாத் தாபம் குடிகொண்டிருந்தது.

மௌனம்.

சந்திரனே தான் தொடுத்த சொற்பாணங்கள் எதிரே இரு ப்பவர்களின் இதயத்தில் எவ் வாறு எதிரொலிக்கிறது எனறு ஊன்றிக் கவனித்தான்.

ஒரே மௌனம்!

"சந்திரன்" டிங்கானின் குரல் தழதழத்தது. "மூக்கைப் பிடித்துக் கொண்டு நீரில் அமுக்கிவிட்டது போல இருக்கி றது உங்கள் பேச்சு, நாங்கள் தான் நெருங்கிப் பழகிவிட் டோமே...சற்று விபரமாக..."

"மன்னியுங்கள், உங்கள் விரு ப்பத்துக்கு மாறாக நடந்து கொ ள்வது இதயத்துள் எதையோ செருகிக் கொள்வது போலவே இருக்கிறது. நான் நாவலூரை விட்டுப் போனபின்னர் ஒரு வேளை நீங்கள் காரணத்தை அறியக்கூடும், இப்போதைக்கு வற்புறுத்தாதீர்கள்"

"சரி எப்படியாவது செய் யுங்கள். அடிக்கடி கடிதம் எழு துங்கள். முடிந்த வேளைகளில் எல்லாம் வந்து போங்கள்" என்றா தொடர்ந்து—

"சந்திரன் உங்களைப் போன் றவர்களிடம் அன்பு செலுத்து வதால் சில சமயங்களில் துயர த்தின் அடித்தளத்தைத் தொட் டுப் பார்க்க வேண்டிய நிலை கூட வந்து விடுகிறது. அப் பொழுது தானே நமது அன் பின் தரமும் தெரியவருகிறது" என்று முடித்தார் டிங்கான்.

பேயறைந்தாற் போலச் சந் திரனையே வெறித்துப் பார்த்து

கொண்டிருந்தாள் சுகுணா.

அவன் வாசற்படியைக் கடந்து கொண்டிருந்தான்.

ரயில் புறப்படப் போகிறது சுகுணா சிட்டாய்ப்பறந்து பிளாட்பாரத்துக்குள் நுழைந்தாள்.

"சந்திரன்! உங்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லையோ" என்று ஒரு கடிதத்தைச்சந்திரனிடம் தந்தாள்.

ஆவலுடன் பிரித்தான் சந்திரன். அதை அவனுடைய தந்தையார் நடேசபிள்ளை எழுதியிருந்தார்.

"சந்திரன், நாளைக்கு மீனுவுக்கும் வேறொருவனுக்கும் கல்யாணம். இத்துடன் ஒரு அழைப்பிதழும் அனுப்புகிறேன். இனி மேலாவது அவளை மறந்து நல்லபடியாக வாழப்பார்" என்றிருந்தது கடிதத்தில்.

அழைப்பிதழையே பார்க்க மனமில்லாதவனுக, கடிதத்தையும் சேர்த்துக் கசக்கி பிளாட்பாரத்தில் விசியெறிந்தான்.

"என்ன சந்திரன்..........?" என்று சுகுணா ஆவலாகக் கேட்டாள்.

சந்திரன் சுகுணாவை நோக்கினான். அவளுடைய கண்களில் இருந்து நீர் பொலபொலவென்று வடிந்தது.

"சுகுணா ... ... ....!" என்று கத்தினான் சந்திரன்.

ரயில் பத்துயார் தூரத்தைக் கடந்து போய்க் கொண்டிருந்தது.

(வளரும்)

சுதேசி இன்றேல் சுதந்திரமில்லை

மில்க் வைட் சோப்

உள் நாட்டில் தயாராகும் உயர்ந்த ரக சோப்

மில்க் வைட் சோப்

உங்கள் உடைகளைச் சுத்தமாக்க உதவும்

சுத்தம் சுகம தரும.

மில்க் வைட் சோப்

527, கே. கே. எஸ். வீதி, :: யாழ்ப்பாணம்.

உங்களுடைய கொள்வனவுக்குத் தகுந்த இடம்

பெனாறிஸ்

பெங்களூர்

மைசூர்

காஷ்மீர்

மணிப்புரி

சாறிகளும் நவீன டிசைன்களிலும்

விவாக கால ஆடை அணிகளும்

எம்மிடம் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

பவுண் டன் பேனாக்கள் திருத்திக்கொடுக்கப்படும்

# சாம்பசிவம்ரெக்ஸ்ரைஸ்ல்ஸ்

182, 184, காங்கேசன்துறை றேட்,

யாழ்ப்பாணம்.

**நாடக விமர்சனம்:-**

# இருமனம்

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரிக் கட்டிட நிதிக்காக 7-1-58ல் நடந்த இந்நாடகம் பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைக்கும் கேடுகெட்ட மனிதர்களின் பண்பைக் கருவாகக் கொண்டது.

தனகோடி முதலியார் எனும் கருமி பணந்தேடுவதை— அதனைக் கட்டிக் காப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, பாசம் மனித உணர்ச்சி இவைகளைக் கொன்றொழித்து உலவுவதைச் சித்தரிக்கும் நோக்கமாக, கட்டுக்கோப்புக்குலையாத வகையில் சம்பவங்களைப் புகுத்தியிருக்கிறார் இதன் ஆசிரியரும் பிரதான நடிகருமான திரு. த. பொன்னுத்துரை பி. ஏ. அவர்கள். இவர் கருமியாகத் தோன்றிமேடையில் தான்பெற்ற அனுபவஞானத்தை வெளிக்காட்டி—நாடகத்தின் தரம் விழாதவகையில் பாதுகாத்துச் சபையின் பாராட்டு தலுக்குப் பாத்திரராகிவிட்டார்.

இச்சகம் பேசி முதலாளியின் குணத்துக்கு இயைய நடிப்பதாகப் பாவனைகாட்டும் குண்டு இக்கதையின் ஜீவநாடி என்றால் மிகையாகாது. இப்பாத்திரத்தை ஏற்றுள்ள மாணவன் விகடச் சுவைமூலம் கதைக்கு விறுவிறுப்புக் கொடுப்பதோடு கருமியின் மனோபாவத்தை வெளியிடும் கருவியும் ஆகிறார். இவரது நடிப்பில் எதிர்கால வளர்ச்சி தெரிகிறது.

கருமியின் மகன் மனோகரன், மகள் கல்யாணி, மனோகரின் காதலி வாசந்தி, கல்யாணியின் காதலன் மணி, மற்றும் துரை முதலிய பாத்திரங்கள் கருமியின் மனோபாவத்தை வெளிக்கொண்டு வருவதற்குப் படைக்கப்பட்ட பாத்திரங்களாக விருப்பதாற் போலும் கருமியோடு இணையாத காட்சிகளில் சப்பென்றுகாட்சி தருகின்றனர்.

இப்பாத்திரங்களைத் தாங்கும் மாணவர்கள் வசனத்தை உணர்ச்சியுடன் பேசியுள்ளார்கள். தவிர, நடிப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கத் தவறிவிட்டனர். ஒருசிலரின் நடிப்பு எல்லையை

மீறியதாகவும் படுகிறது. ஒலிபரப்பியை இலக்காகக் கொண்டு வசனத்தைப் பேச முற்பட்டமையாற்றான் அவர்கள் நடிப்பைக் கைவிடவேண்டியேற்பட்டிருக்க வேண்டும். இக்குறைபாடுகள் நீங்கி முக்கிய நடிகருக்குச் சமதையாக மற்றும் பாத்திரங்களும் நடித்திருந்தால் நாடகம் இன்னும் சிறந்திருக்கும்.

காட்சி ஜோடனை-சம்பாஷணை இவைகள் இயற்கையாக அமைந்துள்ளன. தனிமனித உணர்ச்சியை வெளியிடும் இந் நாடகத்தின் தயாரிப்பாளர்கள் தம்முயற்சியில் வெற்றியீட்டியுள்ளனர் என்பதே எனது முடிபு. இ நா.

# "கலைச்செல்வி"

நிர்வாகி
"கலைச்செல்வி"
கந்தரோடை, சுன்னுகம்.

ஐயா,

"கலைச்செல்வி"யின் சந்தாதரராக என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இத்துடன் ஒரு வருட சந்தாவாக ரூபா நான்கு அனுப்புகிறேன்.

பெயர் :......................................................................
விலாசம் :......................................................................
......................................................................

திகதி.......................          ...............................
கையொப்பம்

தமிழ் இலக்கிய மன்றத்திற்காக திருநெல்வேலி சு. இராஜநாயகம் அவர்களால் யாழ்ப்பாணம் 213, கே. கே. எஸ். வீதியிலுள்ள ஸ்ரீ காந்தா அச்சகத்தில் அச்சிடுவித்து வெளியிடப்பட்டது.
நிர்வாக ஆசிரியர்: சி. சரவணபவன்.

# கலைச்செல்வி வளர்ச்சி நிதி.

| | | |
|---|---|---|
| 1. | திரு. நா. கனகசபை, உன்னிச்சை | 10-00 |
| 2. | செல்வி. சகிதேவி தியாகராசா B. A. இ. ப. க. | 10-00 |
| 3. | திரு, ம. சத்தியமூர்த்தி B. A. புத்தூர் | 10-00 |
| 4. | திரு. சோ. பரமசாமி, காஞ்சீபுரம் | 1-00 |
| 5. | திரு. எஸ். பொன்னம்பலம், கந்தரோடை | 25-00 |
| 6. | செல்வி. கமலாதேவி கணபதிப்பிள்ளை அளவெட்டி | 1-00 |
| 7. | செல்வன். மு. சிவசுந்தரம், 'மல்லி ஓடை', வல்வெட்டி | 1-00 |
| 8. | செல்வன். ஆ. தியாகராசா, ஸ்கந்தவரோதயக்கல்லூரி | 1-00 |
| 9. | திரு. தி. ச. வரதராசன், யாழ்ப்பாணம், (நவ. பணம்) | 10-00 |
| 10. | திரு. ஐ. இராசரத்தினம், அட்டன் ,, | 6-00 |
| 11. | திரு. க. சுப்பிரமணியம், வண்ணார்பண்ணை ,, | 1-00 |
| 12. | திரு. எம். சேகு அப்துல்காதர், மதவாச்சி ,, | 1-00 |
| 13. | திரு. சி. கார்த்திகேசு, திருநெல்வேலி ,, | 1-00 |
| 14. | திரு.ம. சண்முகலிங்கம் B.A. திருநெல்வேலி ,, | 1-00 |
| 15. | திரு. எஸ். எல். சவுந்தரநாயகம், இலுப்பைக்குளம் ,, | 1-00 |
| 16. | ஓர் அன்பர், கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் ,, | 2-00 |
| 17. | எஸ். தங்கவேல், திமிலதீவு, மட்டக்களப்பு | 2-00 |
| 18. | எஸ். ஜெகநாதன், இன்பநிலையம், சுன்னுகம். | 1-00 |
| 19. | கே. சின்னத்துரை, துறைநீலாவணை. | 1-00 |
| 20. | க. நாகமணி, காரைநகர். | 1-00 |
| | மொத்தம் | 87-00 |

[பணம் அனுப்பவேண்டிய முகவரி

நிர்வாகி, கலைச்செல்வி, கந்தரோடை S. P. O. சுன்னுகம்.]

# கே. ஆர். லிங்கம்ஸ்

## மிளகாய்த்தூள், கோப்பித்தூள்

பாவிப்பாளர்கட்கு

## விசேஷ அறிவித்தல்.

இப்பொழுது மிகவும் முன்னேற்றமான முறையில் தயார் செய்கிறோம். உங்கள் குடும்பத்துக்கு ஒரு பத்துச்சதப் பைக்கற் திருப்தி என்பது உறுதி. சிக்கனமான முறையில் உங்கள் சாப்பாட்டை தயார் செய்ய எங்களுடைய தூள் வகைகளைப் பாவியுங்கள். எப்பொழுதும் திறமாயிருப்பது எங்களுடைய தூள்வகைகள் என்பதை மறந்து விடாதீர்கள்.

**கே. ஆர். லிங்கம் மில்ஸ்**

நீராவியடி, யாழ்ப்பாணம்.

விநியோகஸ்தர்கள் :

**மில்க் வைற் சோப் வோர்க்ஸ்**

527, கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம்.

# அழகு எங்கே?

## உங்களிடமே இருக்கின்றது!

## நம்பவில்லையா!

எங்களிடம் வாருங்கள்

உங்கள் அழகான உருவத்தை

அப்படியே படம்பிடித்துக் கொடுக்கின்றோம்

## ஆண்டுகள் கழிந்தாலும்

## அழகு குலையாத படங்கள்

# பிறின்ஸ்

## படப்பிடிப்பாளர்கள்

## சுன்னாகம்

Registered the G. P. O. as a Newspaper.




# செல்லம்ஸ்

கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற ஸ்டுடியோ